இரண்டாம் பாகம்—அனுபந்தம்.

ஶ்ராவகாசார

நீதிக் கதைகள்

ஸகலகீர்த்தி ஆசாரியார் அவர்களால்
இயற்றப்பட்ட
பிரஸ்நோத்தர ச்ராவகாசாரம்
என்னும் வடமொழி நூலிலிருந்து
வீடூர், ஸ்ரீ A. தர்மஸாம்ராஜ்ய நயினார் அவர்களால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

கும்பகோணம்
டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயர்,
S. ஜயராமையா அவர்களால்
சுருக்கி எழுதப்பட்டு, பதிப்பிக்கப்பட்டன.

1941.

ஸ்ராவகாசார நீதிக் கதைகள்

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	30	காமாதுரனாய்	காமாதுரனாய்
11	17	சுமத்திரர்	ஸுமித்திரர்
12	19	புரந்தன்	புரந்தரன்
24	5	ஜினதத்தன்	ஜயகுமாரன்

ஸ்ராவகாசார

நீதிக் கதைகளின் அட்டவணை.

I ஸம்யக் தரிசனத்தின் எட்டு அங்கங்களுக்கு உதாரணம். *பக்கம்*

1. அஞ்சன சோரன் கதை (*நிச்சங்கைக்கு*) 1
2. அனந்தமதி கதை (*நிஷ்காங்க்ஷைக்கு*) 3
3. ஓத்தாயண மகாராஜன் கதை (*நிர்விசிகித்ஸைக்கு*) 5
4. இரேவதி இராணி கதை (*அமூடதிருஷ்டித்வத்திற்கு*) 6
5. ஜிநேந்திர பக்தன் கதை (*உபகூஹனத்திற்கு*) 8
6. பாரிஷேணர் கதை (*ஸ்திதிகரணத்திற்கு*) 9
7. வஜ்ரகுமாரன் கதை (*மார்க்கப்பிரபாவனைக்கு*) 11
8. விஷ்ணு முனிவர் கதை (*வாத்ஸல்யத்திற்கு*) 14

II அஹிம்ஸை அணுவிரதங்களால் மேன்மையுற்றவர்கள்.

9. சட்டிப்புலையன் (யமபாலன்) கதை (*அஹிம்ஸை*) 17
10. தனதேவஸ்ரேஷ்டி கதை (*ஸத்யம்*) 19
11. பாரிஷேண குமாரன் கதை (*அஸ்தேயம், களவாடாமை*) 20
12. நீலிநங்கை கதை (*பிரம்மசர்யம்*) 20
13. ஜயகுமாரன் கதை (*பரிமித பரிக்கிரஹம்*) 23

III அஹிம்ஸை முதலிய விரதமில்லாது கேடடைந்தவர்கள்.

14. தனஸ்ரீ கதை (*ஹிம்ஸையால்*) 24
15. சத்யகோஷன் கதை (*அசத்தியத்தால்*) 25
16. உறித்தாபஸன் கதை (*திருட்டினால்*) 27
17. யமதண்டன் கதை (*சீலமின்மையால்*) 30
18. தாடி வெண்ணெய்க்காரன் கதை (*பரிமித பரிக்கிரஹம் இன்மையால்*) 31

IV தான விசேஷத்தால் மேன்மையடைந்தவர்கள்.

19. ஸ்ரீஷேண மகாராஜன் கதை (*ஆகார தானத்தால்*) 32
20. விரஷபஸேனை கதை (*ஔஷத தானத்தால்*) 34
21. கௌண்டேசர் கதை (*சாஸ்திர தானத்தால்*) 37
22. ஒரு பன்றியின் கதை (*அபய தானத்தால்*) 38

V பக்தியால் சிறப்பினையடைந்தது.

23. ஒரு தவளையின் கதை (*ஜிந பூஜா பரிணமத்தால்*) 39

—x—

ஸ்ராவகாசார நீதிக் கதைகள்

அரும்பொருள் விளக்க அகராதி

[எண்கள் பக்கங்களைக் குறிக்கின்றன.]

அக்கிருத்திரிமம் (2)—ஒருவராலும் செய்யப்படாதது, இயற்கையாயுள்ளது.

அணுவிரதம் (19) — இல்லறத்தார் அனுஸரிக்க வேண்டிய விரதங்களில் ஒன்று.

அண்மையில் (12) — அருகில், சமீபத்தில்.

அமரன் (23) — தேவன்.

அமர சுகம் (4) — தேவசுகம்.

அமூட திருஷ்டித்வம் (6) — அன்னிய சமயத்தாரை மேல் என்று கருதுவது.

அவதிக்ஞானி (14) — முக்காலத்திலும் நிகழ்பவைகளை அறியும் சக்தியுடையவர்.

அலகு (29)—பட்சிகளின் மூக்கு.

அஷ்ட மகாப் பிராதிஹார்யங்கள் (36)—குடை, சாமரை, சிம்மாஸனம் முதலிய சிறப்புக்கள்.

அஸ்தேயம் (20) — திருடாமை, (களவாடாமை).

அஹிம்ஸை (17)-கொல்லாமை.

ஆகமம் (37) — அருக பரமன் அருளிய சாஸ்திரம்.

ஆகாஸ காமினி (1) — ஆகாயத்தில் எடுத்துச் செல்லவல்ல ஒரு தேவதை.

ஆலிங்கனம் (23) —கட்டியணைத்தல்.

ஆஷ்டான்ஹிகம் (3) —அஷ்டமி முதல் பௌர்ணமி முடிய எட்டு நாட்கள்.

உசாவினன் (21) — விசாரித்தான், கேட்டான்.

உச்சாரணம் (2) — உச்சரித்தல்.

உத்தம போக பூமி (33) — மேருவின் வடக்கிலும் தெற்கிலுமுள்ள போக பூமிகளில் மேலானது.

உபகூஹனம் (8) — தர்மிகளின் தோஷங்களைப் பிரசம்சிக்காது மறைப்பது.

உன்மத்தன் (20) — பைத்தியம்.

ஐயமுற்று (21)— சந்தேகித்து.

கடற்காலம் (4) —பத்து கோடா கோடி பல்லங்கள் கொண்ட கால அளவு.

கமண்டலம் (6) — விரதிகள் சௌசத்திற்குத் தண்ணீர் வைத்துக் கொள்ளும் பாத்திரம் (சௌசோபகரணம்).

காயோத்ஸர்க்கம் (15) — நின்ற நிலையில் நின்று தியானித்தல்.

கால வரையறை (3)—காலத்தை நியமம் (அளவு) செய்தல்.

காலாந்தரம் (9)— முடிவு காலம்.

குமார்க்கம் (8) — கெட்ட நடவடிக்கை.

சகஸ்ரார கல்பம் (4) — ஸ்வர்க்க லோகத்தின் பகுதியான 16 கல்பங்களில் 12-வது கல்பம்.

சஞ்சலம் (2) — கலக்கம்.

சமவஸரணம் (39) — அருகபரமன் வீற்றிருக்கத் தேவ நிர்மிதமான சபா மண்டபம் (கோவில்).

சம்ஸார சரீர விரக்தி (37) — சம்ஸாரம் (குடும்பம்), சரீரம் முதலியவற்றை வெறுப்பது.

சம்யக்த்வ யோகம் (4) –நற்காட்சியின் சேர்க்கை.

சர்வௌஷதி ரித்தி (37)—எல்லா ஔஷதிகளின் குணங்களும் பொருந்திய ரித்தி.

சாரண முனிவர் (2) — சஞ்சரிக்கின்ற–நினைத்த இடத்துக்குச் செல்லக்கூடிய ரித்தியையடைந்த தபோதனர்.

சலனம் (16) — அசைவு.

சீல மகாத்மியம் (4) — பிரம்மசர்ய விரதத்தின் மகிமை.

சீல விரதம் (23) — பிரம்மசர்ய விரதம்.

சீலாசாரம் (30) — பிரம்மசர்ய நடத்தை.

செப்பு (26)—செம்புடம், டப்பி, கரண்டகம்.

சேஷ்டை (27) — தொந்தரவு, உபஸர்க்கம்.

ஞானதிருஷ்டி (23) — முக்காலத்து நிகழ்ச்சிகளையும் அறிய வல்லவர்.

தர்மோபதேசம் (10) — தர்மத்தைப் போதித்தல்.

தளவரன் (27) — காவலாளி, படைத் தலைவன்.

தனயன் (21) — பிள்ளை.

தீக்ஷை (5) — சன்னியாசத்தை மேற்கொள்ளுதல்.

நங்கை (4) — பெண், ஸ்திரீ.

நந்தீஸ்வரம்(13)—நந்தீஸ்வரத்வீபம் என்னுமிடத்தில் பூஜை நடக்கும் காலம்.

நரமேத யாகம் (16)—மனிதனைக் கொன்று செய்யும் யாகம்.

நிச்சங்கை (1) — ஐயமின்மை, சந்தேகியாதிருத்தல்.

நிர்ணயம் (19) — நிச்சயம்.

நிர்விஸிகித்ஸை (5) — தார்மிகளின் சரீரத்தில் காணப்பட்ட ஏதேனும்குற்றங்களைக் (மாசுகளை, ரோகங்களைக்) கண்டு அருவருப்படையாதிருத்தல்.

நிஷ்காங்க்ஷை (3)—ஸ்திரீ போக வாஞ்சையில்லாதிருத்தல்.

நிஷ்டை (11) — தியானம் செய்தல்.

பஞ்ச நமஸ்கார மந்திரம் (2) — அருங்கலச் செப்பு 67-ம் பக்கம் பார்க்க.

பரபுருஷகமனம் (22)—பிற புருஷர்களை இச்சிப்பது.

பரிபாலகன் (5) — அரசன், பிரஜைகளைக் காப்பாற்றுகிறவன்.

பரிமித பரிக்கிரஹம் (23) — க்ஷேத்ரம் முதலிய வஸ்துக்களை வேண்டாது வெறுத்தல்.

பரிவிராஜக முனிவர் (38) — அன்னிய சமயத் துறவி.

பர்ண லக்வி (3)--இலை விழுவது போல் மெல்ல விழச்செய்வதாகிய ஒரு வித்தை.

பல்லிங்காசனம் (26) — ஆஸன பேதங்களில் ஒன்று. உட்கார்ந்த நிலையில் தியானிப்பது.

பவனி (13) — ஊர்கோலம்.

பறிமுதல் செய்து(27) — பிடுங்கி.

பாகுடப் பொருள் (35) — மரியாதை செய்யப்பட்ட (இனாமாக அளிக்கப்பட்ட)பொருள்.

பாண்டாகாரம் (26) — பண்டங்கள் வைக்குமிடம், பொக்கிஷம், நிதியறை.

பிரக்ஞப்தி வித்தை (12)— 500 மகா வித்தைகளில் ஒன்று.
பிரசம்சை (5) — பலரறியக் கூறுதல்.
பிரம்மசர்யம் (20) — ஸ்திரீ சேவை செய்யாதிருத்தல்.
பிரலாபித்துக்கொண்டு (16)— தன் மனத்துள் சொல்லிக் கொண்டு.
பிரேமை (39) — பிரியம், ஆசை.
புரதேவதை (22) — நகர்த் தேவதை.
புருஷனின் உடன் பிறந்தாள் (22) — நாத்தனார்.
பூஜாபரிணமம் (40) — பூஜித்த வின்மேல் எண்ணம் உடைமை.
பூஜானுராகம் (39) — பூஜையின் மேல் ஆர்வம்.
பேற்றினையும் (4) — இலாபத்தையும்.
பொட்டையன் (29) — குருடன், கண் தெரியாதவன்.
பொய்க்காது (13) — பொய் ஆகாது.
மகர்த்திக தேவன் (38) — முக்கியமான தேவன்.
மட்டற்ற (13) — குறைவில்லாத (மிகுதியான).
மார்க்கப்பிரபாவனை (11)— தருமத்தை சகலருமறிய வெளியிடல்.
முக்குடை (8) — சந்திராதித்யம் நித்ய விநோதம், சகல பாஜனம் என்னும் மூன்று குடை.
ரதி காலம் (33) — போகஞ் செய்யும் காலம்.
வணிகன் (25) — வியாபாரி.
வனபாலகன் (39) — காட்டைக் காப்பவன்.
லாஞ்சனம் (40) — குறி, அடையாளம்.
வாத்ஸல்லியம் (14) — தர்மிகளை விருப்பத்தோடு அடைதல்.
வாளா (7) — பேசாமல், சும்மா.
விக்ரியாரித்தி (16)—சரீரத்தைச் சிறிது பெரிதாக்கும் ரித்தி.
விசிஷ்டான்னம் (33) — விசேஷமான நல்ல அன்னம்.
வித்தியாதரன் (6)—விஞ்சையன், வெள்ளிமலை வாசி.
விமானரூடன் (3) — விமானத்தில் ஏறியவன்.
விருத்தாந்தம் (7) வரலாறு.
வேசி (4) — வேசைத் தொழில் செய்பவள், தேவடியாள்.
ஸத்ஸம்ஸர்க்கம் (21) — நல்ல பெரியோர்கள், தபஸிகள் கூட்டுறவு.
ஸௌதர்ம கல்பம் (39) – ஸ்வர்க்க லோகத்துப் பகுதியான 16 கல்பங்களுள் முதல் கல்ப லோகம்.
ஸ்தம்பித்து 15)–ஆட்ட அசைக்க முடியாமல் விரைத்து.
ஸ்திதிகரணம் (9) -- தருமத்தினின்றும் நழுகினவரைத் திருத்தி மறுபடியும் தருமத்தில் நிறுத்துவது.
ஸ்ரவணம் (21) — சத்விஷயங்களைக் கேட்டல்.
ஸ்ருதகேவலி (37)–கேவலக்ஞானியினால் தெரிவித்த விஷயங்களை ஸ்ருத (புராணங்கள்) ஞானத்தால் அறிந்தவர்.
ஜாதிஸ்மரணை (37) —முற்பிறப்பை அறியும் அறிவு.
ஜினபவனம், ஜினசைத்யாலயம் (22) - ஸ்ரீ அருகபரமன் கோவில்.

ஸ்ராவகாசார நீதிக் கதைகள்.

அஞ்சனசோரன்
ஆகாசகாமினி வித்தையைச் சாதிக்கும் காட்சி.
1-ம் கதை.

ஓம்.

ஸ்ரீ ஜிநாய நம:|

ஸ்ராவகாசார

நீதிக் கதைகள்.

நிச்சங்கை என்னும் அங்கத்திற்கு உதாரணமான

1. அஞ்சன சோரன் கதை

மகத தேசத்து, இராஜக்கிரஹும் என்னும் நகரவாசியாகிய ஜினதத்த ஸ்ரேஷ்டி என்னும் ஸ்ராவகன், தபத்தினைச்செய்து, வித்யுத்பிரபன் என்ற தேவன்பால் ஆகாசகாமினி வித்தையையும், அதனைச் சாதிக்கவேண்டிய முறையினையும் கற்றுத் தினந்தோறும் மேரு முதலிய பர்வதங்களின் மேலுள்ள அக்ருத்திரிம ஜினசைத்யாலயங்களுக்குச் சென்று தரிசித்து வரலாயினன்.

அதனையறிந்து, அவ்வூரிலேயே வதிந்துவந்த சோமதத்தன் என்ற புஷ்பத்தோட்டக்காரன், ஸ்ரேஷ்டியையணுகி, தனக்கும் அவ்வித்தையினைக் கற்றுக்கொடுத்தால், தானும் புஷ்பங்களை எடுத்துக்கொண்டு அவ்விடம் தரிசிக்க வரக்கூடுமென்று மிகப்ரீதியுடன் ஸ்ரேஷ்டியை மன்றாடிக் கேட்டான். ஸ்ரேஷ்டி, சோமதத்தனுக்கும் அவ்வித்தையைச் சாதிக்கும் முறையைப் போதித்தான்.

அதனைச்சாதிக்க வெண்ணிச் சோமதத்தனும், ஒருகிருஷ்ண பக்ஷத்து சதுர்தசியன்று உபவாசமிருந்து, அன்றிரவு அவ்வூர் மயானத்திலிருந்த பெரியதொரு ஆலமரத்தின் கிழக்குப்பக்கத்துக் கிளையில், 108 கால்களையுடைய தர்ப்பையினாலான உறியினை (ஊஞ்சலை) யமைத்து, அதன் கீழ் தரையில் அனேக கூறிய ஆயுதங்களைக் கூர்ப்பக்கம் மேல்நோக்கி நிற்கும்படி நட்டுவைத்தான். தான் அவ்வுறியிலிருந்து 108 புஷ்பங்களால் ஒவ்வொரு பஞ்ச நமஸ்கார மந்திரத்தைச்சொல்லி ஒவ்வொருகாலாய் வெட்ட ஆரம்பித்தான். அவ்வளவில், கீழே ஜ்வலித்துக்கொண்டிருந்த ஆயுதங்கள் அவன் கண்ணில்படவே, அவன் பயந்து, ஸ்ரேஷ்டியின் வார்த்தையில் சந்தேகம் கொண்டவனாய், ஒருகால் அது பொய்யாயின் நாம் கீழே ஆயுதங்களின் மேல் விழுந்து இறக்க நேரிடுமே யென்ற எண்ணங்கொண்டு, உறியின்மேல் ஏறுவதும் இறங்குவதுமாய்ச் சஞ்சலத்துடனிருந்தான்.

அது சமயம் அரசன் காவலாளிகளால் துரத்தப்பட்டு, பயந்து, அங்கு ஓடிவந்த அஞ்சன சோரன் என்ற திருடன், அங்கு நடந்தவற்றைச் சோமதத்தன்பால் கேட்டறிந்தான். உடனே அவன் ஸ்ரேஷ்டியின் வார்த்தையில் நிச்சங்கிதனாகி (நம்பிக்கைவைத்து), நிர்ப்பயனாய் உறியின் மேலேறி, கிரமப்படி, மந்திரோச்சாரண பூர்வகம் ஒவ்வொருகாலாய் எல்லாக்கால்களையும் வெட்டியெறிந்தான். அவன் கீழே ஆயுதங்களின் மேல் விழப்போகும் சமயம் ஆகாசகாமினி தோன்றி, அவனைக்காப்பாற்றி, அப்போது ஜினதத்த ஸ்ரேஷ்டி இருந்த சுதர்சன மேருவின் மேலுள்ள அக்ருத்திரிம ஜினசைத்தியாலயத்தில், கொண்டுபோய்ச் சேர்த்தது. அங்கே அவன் ஜினபிம்ப தரிசன மகிமையால் சம்யக்தரிசனத்தையுமடைந்தான். பின்னர் அங்கு வந்த சாரண முனிவரிடம் தர்மத்தைக்கேட்டு, ஜினதீக்ஷையை யேற்று, உக்கிர தபசினைச்செய்து, அவன் மோக்ஷத்தையடைந்தான்.

இதனால் நிச்சங்கிதனாகிய காரணத்தினால் அஞ்சனசோரன் முக்தியையடைந்ததும், சந்தேகங்கொண்ட காரணத்தினால் சோமதத்தன் ஒரு பேற்றினையும் பெறாது போயினன் என்பதும் விளங்குகின்றன.

குமாரி அனந்தமதியை வித்தியாதரன் தூக்கிச் செல்லுதல்.

2-வது கதை.

நிஷ்காங்க்ஷை என்னும் அங்கத்திற்கு உதாரணமான

2. அனந்தமதி கதை

அங்கதேசத்துச் சம்பாபுர வாசியாகிய பிரியதத்தன் என்னும் ஸ்ராவகன், ஸ்ரீதர்மகீர்த்தி ஆச்சாரியர் என்ற முனிவரிடம், ஓர் ஆஷ்டான்ஹிக சமயம் எட்டுநாளைக்கும் பிரம்மசரிய விரதத்தினைக் கைக்கொண்டான். அப்போது விளையாட்டாகக் கன்னிகையாகிய தன்குமாரி அனந்தமதிக்கும், அவ்விரதத்தினை நல்கும்படி அம்முனிவரை வேண்டினன். முனிவரும் அதற்கிசைந்து, அவளுக்கு விரதத்தினைக் கொடுக்குங்கால், வினைவசத்தால் அதற்கு ஓர் காலவரையறையைக் கூறாதுவிடுத்தார். பின், அனந்தமதி தக்க வயதினையடைந்ததும், அவளுக்கு மணவினை முடிக்கப் பிரியதத்தன் யோஜித்தான். அப்போது அவள், முன் பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்ட காரணத்தினால், தான் மணஞ்செய்துகொள்ள இயலாது என்றுகூறி, கன்னிகையாகவே இருந்து விட்டனள்.

ஒருநாள் அவள் உத்தியானவனத்தில் விளையாடிக்கொண்டிருந்தபோது, அவ்வழியே ஆகாயத்தில் தன் மனைவியுடன் விமானரூடனாய்ச் சென்றுக்கொண்டிருந்த குண்டிலமண்டிதன் என்ற வித்யாதரன், அனந்தமதியைக்கண்டு அவளழகில் ஈடுபட்டு, அவளைத் தான் அடைய நிச்சயித்தான். உடனே அவன் தன் மனைவியைக் கொண்டுபோய்த் தன்வீட்டில்விட்டுத் திரும்பிவந்து, அனந்தமதியைத் தன் விமானத்தில் பலாத்காரமாய் ஏற்றிச்சென்றான். அவ்வளவில் அவன் செய்கையில் சந்தேகங்கொண்ட அவன் மனைவி, அவனைத்தேடிக்கொண்டு எதிரில் வந்துகொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் வித்யாதரன் பர்ணலக்வி என்னும் வித்தையினால் அனந்தமதியை மெல்லக் கீழே விழும்படி விட்டுவிட்டுத் தன்மனைவியை அழைத்துக்கொண்டுத் தனதிருப்பிடம் சென்றான்.

அனந்தமதி அங்கே ஒருகாட்டில் இறங்கிப் பீமன் என்னும் ஒரு வேடராஜன் கையில் சிக்கினாள். அவன் காமாதுரனாய்

அவளையடைய விரும்பிப் பலாத்காரம் செய்தான். அனந்தமதியினுடைய சீலமகாத்மியத்தால் அங்கு வனதேவதை தோன்றி அவனைப்பலவாறு இம்சித்தது. அனந்தமதி அவனிடமிருந்து தப்பிப் புஷ்கரன் என்ற ஒரு வியாபாரியிடம் அகப்பட்டாள். அவனும் இவளைத்தன் மனைவியாகும்படி பலவாறு இம்சித்தான். இவள் தன்னுடைய நிஷ்காங்க்ஷா குணத்தினால் அவனை வெறுத்துத் தள்ளினாள். அதனால் அவன், அயோத்தியில் காமஸேனை என்னும் வேசியால் அனந்தமதியை ஒப்புவித்தான். அவ்வேசி அவளைத் தன் வேசித்தொழிலை மேற்கொள்ளுமாறு பலவாறு துன்புறுத்தினாள். ஒரு நாளிரவு அவ்வூர் அரசன் சிம்மசேனன் பாலும் அனுப்பினாள். அவன் காமவிகாரம் கொண்டு அவளைப் பலாத்காரஞ் செய்யுமளவில், அவளுடைய சீலப்பிரபாவத்தால் அவ்வூர்ப் புரதேவதை அங்குத் தோன்றி, பல கோரரூபங் கொண்டு அரசனைப்பலவாறு துன்புறுத்தியது. அதனால் அவன் அனந்தமதியை நகர்ப்புறத்து வெளியே துரத்திவிட்டான். அவள் பலவிடங்களிலும் அலைந்து கஷ்டப்பட்டுக் கடைசியில், கமலஸ்ரீ என்னும் ஒரு ஸ்ராவகியால் காப்பாற்றப்பட்டாள்.

அவ்வளவில், பிரியதத்தன் தன்குமாரி அனந்தமதியின் பிரிவாற்றாமையால் வருந்தி, அவளை எங்கும் தேடிக் காணாது தீர்த்த யாத்திரை செய்துவருபவன் கடைசியில் அவ்வீட்டினுக்கே வந்து சேர்ந்தான். மறுநாள் காலை ஸ்ரீகோவிலுக்குச்சென்று, பூஜை முடித்துத் திரும்புகையில் அவ்வீட்டு வாசலில் அனந்தமதியா லிடப்பட்டிருந்த கோலத்தினழகைக்கண்டு துக்கித்தவனாய், அக்கோலத்தினையிட்ட நங்கையைத் தான் காணவேண்டினன். அனந்தமதியும் அவனெதிரில் அழைக்கப்பட, தந்தையும் குமாரத்தியும் ஒருவரை ஒருவர் கண்டு ஆலிங்கனஞ் செய்து ஆனந்த பரவசமடைந்தார்கள். பின்னர் அவளடைந்த துன்பங்களை அவளாற் கூறக்கேட்டு, அங்கிருந்த எல்லோரும் துக்கப்படலானார்கள்.

சிலநாட் சென்றதும் அனந்தமதி தன் தகப்பன் உத்தரவு பெற்று, ஜினதீக்ஷையை மேற்கொண்டு, தவத்தினைச்செய்து ஸ்திரீ ஜன்மத்தை விட்டுச் சகஸ்ராரகல்பத்தில் தேவனாயினள். அங்குப் பதினெட்டு கடற்காலம் அமரசுகமனுபவித்தபின், கிரமத்தில் சம்மியக்த்வ யோகத்தினால் மோக்ஷபதவியினை அடைந்தாள்.

இதனால் நிஷ்காங்க்ஷை அல்லது சரீரசுகபோக வாஞ்சையில்லாமை என்னும் ஸம்மியக்த்வ குணத்தின் மகிமை விளங்குகின்றது.

நிர்விசிகித்ஸை என்னும் அங்கத்திற்கு உதாரணமான
3. ஒத்தாயண மகாராஜன் கதை.

ஒரு சமயம் சௌதர்மேந்திரன் சபையில் ஸம்மியக்த்வத்தைப் பற்றிப் பிரசம்சை நடந்தது. அப்போது அங்கதேசத்து ரௌரக் புரி என்ற நகரத்தின் பரிபாலகனாகிய ஒத்தாயண மகாராஜனும் அவன் இராணி பிரபாவதி தேவியும் நிர்விசிகித்ஸை என்னும் சம்யக்த்வ குணத்திற்கு உதாரணமாகக் கூறப்பட்டார்கள். அதனைப் பரீக்ஷிக்கவெண்ணி, அங்கிருந்த வாசவன் (வசுதேவன்) என்ற ஒரு தேவன், மிக்க துர்க்கந்தமுள்ளதும், குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டதுமான கோர ரூபமுள்ள ஒரு முனிவனைப் போல் தன் உருவை மாற்றிக்கொண்டு அவ்வரசன் அரண்மனைக்கெதிரில் சென்றுகொண்டிருந்தான். முனிவரைக் கண்டதும் அரசன் எதிர்கொண்டழைத்து, பக்தி வினயத்துடன் உபசரித்து, விதிப்படி ஆகாரதானத்தைச் செய்தான். முனிவன் அதை உண்டதும், தன் மாயாசக்தியினால் மிக்கத் துர்க்கந்தத்தோடு கூடிய கோரமான வாந்தியைச் செய்தான். அந்த துர்க்கந்தத்தைச் சகிக்கமாட்டாமல் அங்கிருந்த பரிஜனங்களெல்லாம் அவ்விடத்தை விட்டு ஓடிப்போனார்கள். அரசனும் இராணியுமட்டும் அங்கிருந்து அம்முனிவன் உடம்பிற்றெறித்த வாந்தியினைத் தங்கள் கையினாலேயே அலம்பிச் சுத்தஞ் செய்தார்கள். பின்னும் அவர்கள் "அந்தோ! ரோக பீடிதமாகிய சரீரத்திற்குத் தகாத ஆகாரத்தினைக் கொடுத்து விட்டோமோ" என்றுப் பரிதவித்துத் தங்களைத் தாங்களே நிந்தித்துக்கொள்ளலானார்கள். அதனைக்கண்ட முனிவன் தன் சுயரூபத்தில் தோன்றித் தன் வரலாற்றினைத் தெரிவித்தும், அரச தம்பதிகளைப் பூஜித்துப் போற்றியும் போயினன். பின்னர் ஒத்தாயண மகாராஜன் ஸ்ரீ வர்த்ததமான ஸ்வாமியின் பக்கல் தீக்ஷையைக் கைக்கொண்டு கோரமான தபசைச்செய்து கிரமத்தில் முக்தியினையடைந்தான்.

பிரபாவதி தேவியும் தபோ விசேஷத்தால் ஸ்திரீ ஜன்மத்தை விடுத்துத் தேவனுயினள். இதனுல் நிர்விசிகித்ஸை என்னும் ஸம்மியக்த்வ குணத்தின் மகிமை விளங்குகிறது.

அமூடதிருஷ்டித்வம் என்னும் அங்கத்திற்கு உதாரணமான

4. இரேவதி இராணியார் கதை.

விஜயார்த்தகிரியின் சரிவிலுள்ள, மேககூட நகராதிபதி சந்திரப்பிரபன் என்ற வித்தியாதரன், தன் மகன் சந்திரசேகரனிடம் இராஜ்யத்தைவிட்டுத் தான் ஸ்ராவக விரதத்தினை மேற்கொண்டு, தென்மதுரையில் முனிகுப்தாசாரியார் என்பவரிடம் ஆகமாதி நூல்களைக் கற்றுவரலாயினன். ஒரு சமயம் அவன் உத்தர மதுரைக்குச்செல்ல உத்தேசித்துக் குருவை வணங்கி, அவ் விடம் யாருக்கேனும் ஏதேனும் சேதியுளதாவெனக் கேட்க லானுன். குரு அவ்விடத்திலுள்ள சுவ்ரதாசாரியாருக்குத் தன் நமஸ்காரத்தையும், அவ்விடம் அரசன் வருணசேனனுக்கும், அவன் மனைவி இரேவதி தேவிக்கும் தன் ஆசிர்வாதத்தையும் கூறச் சொன்னுரேயொழிய, பன்முறை கேட்டும் அவ்விடத்திலுள்ள பதினேரு அங்கங்களையுமறிந்த பவ்யசேனமுனிவருக்கு ஒன்றும் கூறவில்லை. இது ஏனே? அதனை அறியவேண்டும் என்று யோஜித்தவனுய் வித்தியாதரன், தன் வித்தையினுல் உத்தர மதுரையை விரைவிலடைந்து, சுவ்ரதாசாரியாருக்குக் குருவின் நமஸ்காரத்தைக் கூறிவிட்டுப்பின் பவ்யசேனரிடம் வந்து வணங் கினன். அம்முனிவர் கர்வித்து மௌனமாயிருந்தார். பின்னர் அவர் சௌசத்திற்குச் செல்லுங்கால், வித்தியாதரனுகிய சீடன் கமண்டலத்தை எடுத்துக்கொண்டு பின் சென்றுன். கமண்ட லத்திலுள்ள நீரைக் கீழே கொட்டிவிட்டு வித்தியாதரன், தன் வித்தையினுல் அங்கு ஒரு புல் தரையையும், ஒரு குளத்தினையுந் தோன்றச் செய்தான். முனிவர் துறவிகளின் விதிகளை யோஜி யாது அப்புல்தரையிலேயே வெளிக்குப் போய்விட்டுப் பக்கத்தி

லுள்ள குளத்தில் சுத்தி செய்துகொண்டார். இதனைக்கண்டதும் வித்தியாதரன், தன் குரு இம்முனிவர் பெயரைக்கூடச் சொல்லாததற்கு இதுவே காரணமென்று அறிந்தவனாய், இம்முனிவருடைய காரியங்களைப் பிரசம்சைசெய்து, அபவ்யசேனன் என்ற பெயரே இவனுக்குத்தகும் என்று கூறினன். அதுமுதல் அப்பெயரே அவருக்கு எங்கும் விளங்கலாயிற்று.

மற்றொருநாள் வித்தியாதரன், தன் வித்தையால் பிரம்மா, விஷ்ணு, சிவன், தீர்த்தங்கரர் முதலியவர்களின் உருவங்களை ஆகாயத்தே தோற்றுவித்தான். அவற்றை எல்லோரும் சென்று வணங்கலானார்கள். இரேவதி இராணியார் மட்டும், பலபேர் பன்முறை சொல்லியும் போகாமல், "அவர்களெல்லாம் முற்காலத்திலிருந்தவர்களாகையால் இங்குவரக்காரணமில்லை" என்று கூறி வாளாவிருந்தனள். பின்னர் வித்தியாதரன், குஷ்டரோகமுள்ள சரீரத்தையுடைய முனிவனைப்போல் வேடந்தரித்து, அரண்மனை வாசலில் வந்து மூர்ச்சையாகி விழுந்தான். இதனையறிந்து, இரேவதையார் ஓடோடியும் வந்து, முனிவனைப் பரிவுடனெடுத்து, சுவஸ்தப்படுத்தி, பக்தியுடன் விதிப்படி ஆகாரதானத்தைச் செய்தனள். அதனையுண்டு அம்மாயாவி துர்க்கந்தமுள்ள வாந்தியினைச் செய்தான். அதனை இராணியார் சுத்தப்படுத்தி, "அந்தோ! நான் என்ன குற்றம் செய்துவிட்டேனோ?" என்று மனமுருகித் தன்னைத்தானே நிந்தித்துக் கொண்டனள். உடனே மாயா வித்தியாதரன் தன் சுயவுருவத்தை வெளிக்காட்டித் தன் விருத்தாந்தங்களையும், தன் குருவின் ஆசீர்வசனத்தையுங் கூறி இராணியாரைப் போற்றிப் பூஜித்துப்போயினன். பின்னர் வருணராஜன் தவத்தினைச் செய்து மோக்ஷமடைந்தனன். இரேவதை இராணியாரும் தவ விசேஷத்தால் ஸ்திரீ ஜன்மத்தைவிட்டுத் தேவபதவியை எய்தினள்.

எனவே இரேவதி இராணியார், அமூடதிரிஷ்டித்வம் என்ற ஸம்யக்த்வ குணத்திற்கு உதாரணமாகக் கொள்ளப்பட்டாள்.

உபகூஹனம் என்னும் அங்கத்திற்கு உதாரணமான

5. ஜிநேந்திர பக்த ஸ்ரேஷ்டி கதை.

சௌராஷ்டிர தேசத்துப் பாடலீபுர நகராதிபதி யசோதரனுக்கும் அவன் மனைவி ஸுஸீமா என்பவளுக்கும் புத்திரனான சுவீரன் என்பான் குமார்க்களுகித் தன்னையொத்த குமார்க்கர்களுடன் சேர்ந்து திரியலுற்றான். நிற்க, கௌடதேசத்து தாம்ரலிப்த நகரில் வசித்த மிக்க தனிகனான ஜிநேந்திர பக்த ஸ்ரேஷ்டி என்பவன், தன் ஏழடுக்கு மாளிகையின் மேல்தளத்தில் ஸ்ரீ பார்சுவ தீர்த்தங்கர பரமதேவரின் பிம்பத்தை ஸ்தாபித்து அதன் முக்குடையின் உச்சியில், விலை மதிப்பிடமுடியாத வைடூரிய இரத்தினமொன்றைப் பதிப்பித்து வைத்திருந்தான். இதனைக் கேள்வியுற்ற சுவீரன், தான் அந்த இரத்தினத்தையடைய விரும்பித் தன் தோழர்களில் தந்திரத்திலும் களவாடுந் தொழிலிலும் மிகத் தேர்ச்சிபெற்றவனான சூர்பன் என்பவனை, அக்காரியத்தை முடிக்க ஏவினன். சூர்பன், பதினோராவதுநிலை ஸ்ராவகனைப்போல் வேடந்தரித்து தாம்ரலிப்த நகரமடைந்து, ஜனங்கள் தன்னைப் பெரிய காயக்கிலேசத்திற்றீர்ந்த தவசிரேஷ்டனெனப் புகழுமாறு ஒரு குழப்பத்தினை யுண்டாக்கி ஜினேந்திரபக்தன் கவனத்தைக் கவர்ந்தான். அவனும், இச்சூதினை யறியாது, அவனை உண்மைத் தவஸ்ரேஷ்டனென்றே நினைத்து, அவனைச்சென்று வணங்கித் தன் மாளிகைக்கழைத்து வந்து, ஜினபிம்ப தரிசனம் செய்து வைத்து, அவ்விடத்திலேயே காவலாகவும் இருக்கச்செய்தான். பின்பு ஒரு நாள் ஸ்ரேஷ்டி வியாபார நிமித்தம் கடல்யாத்திரை செல்ல வீட்டைவிட்டுப் புறப்பட்டு நகர்ப்புறத்தில் இருந்த ஒரு மாளிகையில் தங்கினான். இவ்வளவில் ஸ்ரேஷ்டி கப்பலேறிச் சென்றிருப்பானென நினைந்த சூர்பன் நடுஇரவில் இரத்தினத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ஓட யத்தனித்தான். அதன் ஜோதிப் பிரகாசத்தால் மற்றக் காவலர்கள் கண்டு அவனைப்பிடித்து, இரத்தினத்துடன் ஸ்ரேஷ்டியின் முன் கொண்டுவந்து நிறுத்தி நடந்தவற்றைக்கூறினார்கள். தப்ப வழியறியாத சூர்பன் தன்னைக்காப்பாற்றும்படி ஸ்ரேஷ்டியின் பாதங்களில் விழுந்து வேண்டினன். ஸ்ரேஷ்டியும் இதனை வெளியிடுவது ஜினதர்மத்துக்கு நிந்தை

யாகுமென வெண்ணி, "இவ்விரத்தினத்தை நானே எடுத்துவரச் சொன்னேன். இம்மகானைத் திருடனென்பது பிசகு" எனக்கூறி அவனை விடுத்துக் காவலாளிகளைப் போகச்செய்து பின் பல யுத்திகளைக்கூறிச் சூர்பனையும் தப்பிப்போகச் செய்தான். காலாந் தரத்தில் ஸ்ரேஷ்டியும் தவத்தினைச் செய்து மோக்ஷ மெய்தினன்.

இவ்விதமே அக்ஞானிகளால் செய்யப்படும் குற்றங்களை மன்னித்துப் பிரசம்சை செய்யாமலிருப்பது ஸம்யக்திரஷ்டி களின் கடமையாகும்.

ஸ்திதிகரணம் என்னும் அங்கத்திற்கு உதாரணமான
6. பாரிஷேணன் கதை.

மகததேசத்து இராஜக்கிரக நகராதிபதி ஸ்ரேணிகமகாராஜனுக்கும் அவன் தேவி சேலினிமாதேவிக்கும் மகனாகிய பாரிஷேணன் என்பான் சம்யக்திருஷ்டியாகி, ஒரு சதுர்தசியன்று உபவாச மிருந்து, அன்றிரவு மயானத்தில் காயோத்ஸர்க்கனாய்த் தியானத் திலிருந்தான். அப்போது, நகரில் ஒரு முத்துமாலையைத் திருடி, நகர்க்காவலர்களால் துரத்தப்பட்டு ஓடிவந்த வித்யுத்சோரன் என்ற திருடன், அம்முத்துமாலையைத் தியானத்திலிருந்த பாரி ஷேணர் முன் எறிந்துவிட்டு ஓடிப்போய் தப்பித்தான். காவலர் கள் நகையினைக்கண்டு பாரிஷேணரைக் கள்வனென்று பிடித்துப் போய் அரசன்முன் நிறுத்தினார்கள். அரசன் தீர விசாரியாது குமாரனைக் கொன்றுவிட உத்தரவளித்தான். கொலையாளிகள் அவ்வாறு கொலைசெய்ய யத்தனிக்கையில் கத்தி மாலையாக விழக் கண்டு, அதனைஅரசனிடம் தெரிவித்தார்கள். அரசன் குமாரனை வணங்கித் தான் செய்த தவறை மன்னிக்கும்படி கேட்டான். அப்போது வித்யுத்சோரனாகிய திருடன், அங்குவந்து நடந்த வற்றைக் கூறித் தன்னை மன்னிக்குமாறு அரசனை வேண்டினான். அரசன் முதலியோர் அதனைக்கேட்டு ஆச்சரியமுற்று, பாரி ஷேணனை அரண்மனைக்கு அழைத்தார்கள். அவன் அதற்கிணங்

காது, தகப்பன் உத்தரவுபெற்று, தீக்ஷையைக் கைக்கொண்டு தபசியாயினன்.

பின்னொரு நாள், பாரிஷேணன் பலாசகூடம் என்னும் கிராமத்துக்குச் சரியாமார்க்கமாகச் செல்ல, அவருடைய பால்ய சிநேகிதனும், மந்திரி குமாரனுமாகிய புஷ்படாலன் என்பவன், முனிவரை வரவேற்று விதிப்படி ஆகாரதானஞ் செய்துவைத்துப் பின் வழியனுப்ப அவருடன் சென்றான். அப்போது முனிவர் தன் சிநேகிதனுக்குத் தர்மோபதேசஞ் செய்து தன்னுடன் தீக்ஷையைக்கைக்கொள்ளுமாறு கூறினார். அவனும் அவரிடமுள்ள பிரீதியினால் ஒப்புக்கொண்டானே யொழிய, அவன் தன் மனைவி ஸோமிலை ஞாபகமாகவே இருந்தனன். இவ்வாறு பன்னிரண்டு வருஷங்கள் கழித்து, ஒருசமயம் இருவரும் ஸ்ரீவர்த்தமான ஸ்வாமியின் சமவஸரணத்துக்குச் சென்று துதிக்குங்கால் புஷ்படாலன் தன் மனைவி நினைவாகவே துதித்தான். அதனைக் குறிப்பாலறிந்த பாரிஷேணர் அவனைத் தம் மனைக்கழைத்துவந்து தேவஸ்திரீகளுக்கொப்பான தம் முப்பத்திருவர் மனைவிகளையும் காண்பித்துப் பின் அவன்மனைக்கு ஏக அவனையழைத்தார். அப்போது அவன் லஜ்ஜையினையடைந்து இப்பேர்பட்ட இராஜ்யாதி ஸ்திரீபோகங்களை இவர் விட்டிருக்க, நாம் நம்மனைவியை நினைத்தது மூடத்தனமாகும் என்று எண்ணியவனாய், வைராக்ய சித்தத்தை யடைந்து, தீவிர தபசைச் செய்து ஸ்வர்க்கமடைந்தனன். பாரிஷேணரும் அவ்வாறே தவத்தினைச்செய்து ஸ்வர்க்கமெய்தினர். பின்னர் இவர்கள் முக்தியினையுமடைவர்.

இது விரதங்களை யனுஷ்டித்துத் தவறினவர்களைத் திருத்தி மறுபடியும் அவ்விரதங்களை அனுஷ்டிக்குமாறு செய்யும் ஸ்திதிகரணமாகிய ஸம்யக்த்வ குணம் ஆகும்.

மார்க்கப்பிரபாவனை என்னும் அங்கத்திற்கு உதாரணமான

7. வஜ்ரகுமாரன் கதை.

அஸ்திபுரத்தில் சோமதத்தன் என்ற ஒரு புரோகித குமாரன் பல கலைகளையுங் கற்றுத்தேர்ந்து மிக்க சாமார்த்திய முள்ளவனாயிருந்தான். அவன் ஒருகால் தன் மாமனாகிய சுபூதி என்பவன் வசித்த அஹிசந்திரபுரம் என்ற நகருக்குச் சென்றிருந் தான். அப்போது அவன் தன் வித்யாசாமர்த்தியத்தினால் அந் நகரத்தரசனை அகமகிழச் செய்து அவனிடம் மந்திரியாயினன். மாமனாகிய சுபூதியும், தன் மகள் யக்ஞதத்தையை விதிப்படி அவனுக்கு மணஞ்செய்துவைத்தான். சிறிது காலஞ்சென்று கருப்பமுற்ற யக்ஞதத்தை, கொம்பில் பழுத்த ஒரு மாங்கனியை உண்ண விரும்பினள். சோமதத்தன் பல ஆட்களையனுப்பி அதனைத் தேடச் செய்தும் பயன்பெறுமற் போயினன். அதனால் அவன் தானே அதனைத் தேடிச்சென்று,ஒரு மரத்தில் அங்ஙனம் பழம் இருக்கக் கண்டு, அதனைப் பறித்து ஆள்கள் வசம் தன் மனைவிக்கனுப்பினன். பின்னர், அவன் அம்மரத்தடியில் தங்கி யிருந்த சுமத்திரர் என்ற முனிவர்பால் ஜினதீக்ஷையைப் பெற்று நாபிகிரி என்னுமிடத்திற்றங்கித் தவஞ் செய்யலானான். சின்னா ளில் ஓர் ஆண்மகவைப் பெற்ற யக்ஞதத்தை, தன் புருஷன் இவ்வாறானதைக் கேள்வியுற்றுக் கடுங்கோபங் கொண்டு, தான் பெற்ற அக்குழந்தையினை யெடுத்துப் போய்ச் சோமதத்த முனிவர் பாதத்தில் போட்டு, அவரைப் பலவாறு நிந்தித்து, வீடு திரும்பினாள்.

இது நிற்க, விஜயார்த்த பர்வதத்து அமராவதி என்னும் நகரத்தில், திவாகரதேவன் என்னும் ஒரு வித்தியாதரன் அரசு செலுத்தி வந்தான். அவனுக்குப் புரந்தரன் என்றோர் இளைய சகோதரனிருந்தான். அவன் தமயன் அரசினைக் கவர்ந்து, அவனையும் நாட்டைவிட்டு ஓட்டினன். அதனால் திவாகரதேவன், தன் விதியை நொந்து, தன் மனைவி ஜயஸ்ரீ என்பாளுடன் பல விடங்களிற் சுற்றிப் பல முனிவர்களைத் தரிசித்து வரலானான். அக்கால் அவன், நிஷ்டையிலிருந்த ஸோமதத்த முனிவரைக் கண்டு வணங்கி, அவர் நிஷ்டையைக் கலைக்காது, அவர் பாதத்

தில் கிடந்த குழந்தையினை மட்டும் தான் எடுத்துக்கொண்டான். பிறகு, அவன் அண்மையிலிருந்த கனகபுரம் என்ற ஊரினிற் சென்றுவதிந்து, அக்குழந்தைக்கு வஜ்ரகுமாரன் எனப் பெயரிட்டு, அதனைத் தானுந் தன் மனைவியுமாக வளர்த்து வாலானார்கள். குமாரனும் வளர்ந்து கண்டோர் காமுறுங் காளையாயினன்.

அப்போது, கருடவேகன் என்னும் வித்யாதரனுக்கும் காங்கவதி என்னும் அவன் மனைவிக்கும் புத்திரியான மதனவேகை என்பவள், பிரக்ஞப்தி என்னும் வித்தையைச் சாதிக்கவெண்ணிப் பக்கத்திருந்த ஹேமந்தகிரி என்னும் மலைச்சாரலில் கடுந் தவமியற்றினாள். அப்போது காற்றிலலைக்கப்பட்ட இலந்தை முள் அவள் கண்ணில் குத்தி உபத்திரவமுண்டாக்கியதால் அவள் வித்தையைச் சாதிக்க இயலாது, நிலை தடுமாறி நின்றாள். அது சமயம் அங்குத் தற்செயலாய் வந்த வஜ்ரகுமாரன் அதனைக் கண்டு, முள்ளை மெல்ல விலக்கிவிட, அவள் துன்பந் தீர்ந்து இஷ்டசித்தியை யடைந்தனள். பின், அவள் தனக்குதவிய அவனையே நாயகனாக வேண்டி, விதிப்படி மணந்து, அவனுடைய மனைவியாயினள்.

இப்பால், வஜ்ரகுமாரன் தன் மனைவி சாதித்த வித்தையின் உதவியால் அமராவதி சென்று, புரந்தரனைப் போரில் வென்று, அந்நாட்டை ஜயித்துத் தன் வளர்ப்புத் தாய்தந்தையர்களை அதில் சேர்த்து, முடிசூட்டி வைத்தான். அவ்வாறானபின், ஒரு நாள் ஜயஸ்ரீயாகிய வளர்ப்புத்தாய் வஜ்ரகுமாரனை "அன்னியன் பிள்ளை" யெனத் தூற்ற, அவன் வருந்தித் திவாகரதேவன்பால் சென்று தன் பிறப்பினைப்பற்றி உசாவினான். அவன் தானறிந்தவற்றைமட்டுங்கூறி, மற்றையவற்றினையறியக் குமாரனுந் தானுமாக மதுரையின் பக்கலிருந்த க்ஷத்திரியக்குகையில் தவஞ்செய்திருந்த சோமதத்தமுனிவர்பால் வந்துகேட்டான். சோமதத்தனும் அவற்றைக்கூறிப்பின் குமாரனைத் தீக்ஷையைக்கைக்கொள்ளுமாறு போதிக்க, அவனும் தவத்தினையேற்று அங்கேயே தங்கலானான்.

அந்நாள் மதுரையில், பூதிகாந்தன் என்னும் அரசனும் அவன் தேவி ஊர்விளா என்பவளும் அரசாண்டிருந்தார்கள். அந்நகரிலேயே சாகரதத்தன், சமுத்திரதத்தை என்னும் ஒரு ஏழைச் சதிபதிகளுக்குத் தரித்திரை என்பவள் புத்திரியாகப்

பிறந்து, பால்யத்திலேயே தாய் தகப்பனையிழந்து, காப்பாரற்று, உடுக்க உடையுமின்றி, யாசகமெடுத்துத் திரிந்து வரலானாள். அப்போது அங்கு வந்த சாரண முனிவர்கள் இருவர் அவளைக் காண, அதிலொருவர் "இவள் பூர்வஜன்ம வினைப்பயனை யனுபவிக்கின்றாள்" எனவும், மற்றவர் "சீக்கிரம் இவள் இவ்வூர் இராஜ பத்தினியாவாள்" எனவும், ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளலானார்கள். அதனைக் கேட்டிருந்த புத்தஸந்நியாசினி யொருத்தி 'ஜினமுனிகள் வார்த்தை பொய்க்காது பலிக்கும்" என்றெண்ணி, அப்பெண்மணியைத் தான் அழைத்துச்சென்று, புத்த மடத்திற் சேர்த்து, ஊணும் உடையும் உதவிக் காப்பாற்றி வரலானாள். தரித்திரையும் வளர்ந்து, பால்யம் நீங்கி, மட்டற்ற அழகினையுடைய மங்கையாயினள். அவள் ஒரு நாள் புத்தமடத்தின் உப்பரிகையில் உலவியிருக்கும்போது, வீதியில் பவனி வந்த பூதிகாந்த அரசன் அவளைக்கண்டு மோகமுற்றவனாகி, அவளைத் தனக்கு மணஞ் செய்து தருமாறு அப்புத்தஸந்நியாசினியை வேண்டினன். அவளும் "நீ புத்த மதத்தில் சேருவாயானால் அவளை மணக்கலாம்" என்று கூற, அரசனும் அம்மதத்தில் சேர்ந்து அவளை விதிப்படி மணந்து தன் பட்டமகிஷியாக்கினன்.

இவ்வாறாக, ஊர்விளாதேவி, ஒவ்வொரு பங்குனி மாதமும் நந்தீஸ்வர ஆஷ்டான்ஹிக சமயம் ஜினபகவானுக்கு இரதோத்ஸவம் செய்யும் தன் வழக்கப்படி, அவ்வருஷமும் அரசன் உத்தரவு பெற்று, அதனை நடத்த முற்பட்டாள். அப்போது தரித்திரை தானும் தன் புத்தபகவானுக்கு அவ்வித உத்ஸவம் செய்யக் கருதித் தன்னிடம் அதிகப் பிரியமுள்ள அரசனிடம் உத்தரவு பெற்று, ஜினபகவான் இரதத்தை நிறுத்தித், தன் இரதத்தை அதற்குமுன் செலுத்தலானாள். இதனைக் கண்ட ஊர்விளாதேவி "என் இரதம் முன் செல்லாதவரையில் நான் உணவு அருந்துவதில்லை" என்று நியமஞ் செய்துகொண்டு, அதனை அந்த க்ஷத்திரியக் குகையில் தவஞ் செய்திருந்த சோமதத்தன்பால் வந்து கூறினாள். அதனைக் கேட்டிருந்த வஜ்ரகுமாரன், அப்போது அங்குத் தன்னைப் பார்க்க வந்த, தன்னை வளர்த்தவனும் வித்தியாதரனுமாகிய திவாகர தேவனிடம் கூறி, "மார்க்கப் பிரபாவனையின் நிமித்தம்" ஊர்விளாதேவிக்கு உதவிசெய்யும்படி வேண்டினன். வித்தியாதரன் தன் வித்தையினால் உடனே அந்த புத்த இரதத்தை ஒடித்து நாசப்

படுத்தி, ஊர்விளாவின் ஜினபகவான் இரதத்தை ஆகாய வழியே வீதி வலம் வரச் செய்தனன். இதனைக் கண்ட அரசன் முதலிய யாவரும் ஆச்சரியமுற்று, புத்தமதத்தினை விட்டு ஜினமதத்தில் ஈடுபட்டு அதனைப் பிரசம்ஸிக்கலானார்கள். பின், வஜ்ரகுமாரன் தவத்தினைச்செய்து மோக்ஷமெய்தினன்.

மார்க்கப் பிரபாவனை ஸம்யக்தரிசனத்தின் ஓர் அங்கமாகும் என்பது இக்கதையால் வெளியாகின்றது.

வாத்ஸல்யம் என்னும் அங்கத்திற்கு உதாரணமான
8. விஷ்ணு முனிவர் கதை.

அவந்தி தேசத்து உஜ்ஜயினி நகரத்தில் ஸ்ரீவர்மா என்ற அரசன் ஆண்டிருந்தான். அவனுக்குப் பலி, பிரஹஸ்பதி, பிரஹ்லாதன், நமுச்சி என்ற நால்வர் மந்திரிகளிருந்தனர். ஒரு நாள், சகல சாஸ்திரங்களையுங் கற்றறிந்த அவதிக்ஞானியாகிய அகம்பனாசாரியார் என்பவர், எழுநூறு சிஷ்யமுனிவர்களுடன் அந்நகரத்து உபவனத்தில் வந்துத் தங்கினர். அப்போது ஆச்சாரியார் சீடர்களிடம் "அரசரே வந்த போதிலும் ஒருவரும் ஒன்றும் பேசலாகாது. பேசினால் நம் சங்கத்துக்கே அனர்த்தம் நேரிடும்" என முன்கூட்டி எச்சரித்தார். நிற்க, ஸ்ரீவர்மா வரசன், முனிவர்கள் எழுந்தருளியிருக்கும் சேதியறிந்து, தன் மந்திரிகள் நால்வருடன் சென்று, அவர்கள் பாதங்களில் விழுந்து வணங்கினர். முனிவர்கள் முன்னெச்சரிக்கையின்படி அவர்களுக்கு ஆசிகூடக்கூறாது வாளாவிருந்தார்கள். அரசர், 'முனிவர்கள் தியானத்திலிருப்பதால் பேசாதிருந்தனர்' என்று நினைத்தாரே யொழிய வேறு வித்தியாசமாக எண்ணவில்லை. ஆனால் நால்வர் மந்திரிகளும் கோபமடைந்து, "என்னே! இவர்கள் ஒன்றுந்தெரியாத கடாமாடுகள். தின்று கொழுத்துத் தியானிகள்போல் வேஷம் போடுகிறார்கள்." என்று நிந்தித்துச் சென்றார்கள். அப்படிச் செல்லும் வழியில், நகருக்குள் சென்று திரும்பி வரும் ஸ்ரீஸ்ருதஸாகர முனிவரைக் கண்டு அம்மந்திரிகள், "இதோ ஒரு கடாமாடு, நகரிற் சென்று வயிறு நிறையப் பொறுக்கித் தின்றுவிட்டுத், திரும்பி வருகிறது

ஸ்ருதஸாகர முனிவரை
நான்கு மந்திரிகள் வெட்ட எத்தனிக்கும் காட்சி.

8-வது கதை.

பாருங்கள்" என்று பரிகசித்தார்கள். இதனைக் கேட்ட முனிவர் அரசனிடம் சென்று தெரிவித்து, அம்மந்திரிகளை வாதுக்கிழுத்து ஸ்யாத்வாதமுறையினால், அவர்களை ஜயித்துத் திரும்பினார். சங்கத்துக்கு வந்து, குருவாகிய அகம்பனாசாரியாரிடம் நடந்தவற்றைக் கூறினார். அவர் "அந்தோ! உமது செய்கையால் முனிகள் சங்கம் அழியக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டதே. நீர், முன் அவர்களைக் கண்ட அதே இடத்திலேயே, இன்றிரவு காயோத்ஸர்க்கமாய்த் தியானத்திலிருப்பீரானால்தான், நம் சங்கம் உயிருடனிருக்கமுடியும்" என்று கூறினார். முனிவரும் அவ்வாறு அங்குச் சென்று தியானத்திலிருந்தார். வாதில் தோற்ற மந்திரிகள், அம்முனிவர்களை ஒழிக்க, அன்றிரவு தங்கள் கத்திகளுடன் புறப்பட்டு வரும் வழியில், தியானத்திலிருந்த முனிவரைக் கண்டு, அவரைக் கொல்ல, நால்வரும் கத்தியை ஓங்கினார்கள். அவ்வளவில் ஓங்கிய கைகள், முனிவருடைய தபோ மகிமையினால், ஓங்கியவாறே ஸ்தம்பித்து நின்று விட்டன. மறுநாட் காலையில் இதனை ஜனங்களால் கேள்வியுற்ற அரசன், அங்கு வந்து முனிவரைச் சரணமடைந்து, மந்திரிகளை விடுவித்து நாட்டினின்றும் துரத்தி விட்டான்.

இஃதிவ்வாறாக, குருஜாங்கல தேசத்து அஸ்தினாபுரம் என்ற நகரில் மகாபத்மன் என்ற அரசன் அரசு செலுத்தி வந்தான். அவன் தன் மனைவி லக்ஷ்மீமதியால் உண்டான பத்மன், விஷ்ணு என்ற குமாரர்களிருவரில் பத்மனுக்கு இராஜ்யத்தை ஈந்து, தானும் விஷ்ணு குமாரனுமாகத் தவத்தை மேற்கொண்டார்கள். அப்போது முற் கூறப்பட்ட பலிமுதலிய மந்திரிகள் பத்மராஜனிடம் வந்து வேலையிலமர்ந்தனர். அக்கால் பலியானவன், பத்மராஜனின் நெடுங்கால விரோதியான கும்பபுரமென்னும் துர்க்கத்துக்கு அரசனான சிம்மபலன் என்பவனை ஜயித்து, அவனையும் சிறைப்படுத்தி வந்தான். அதனால் மகிழ்ச்சியுற்ற பத்மன், பலியினிடம் "ஒரு வரத்தினைக் கேள், தருகிறேன்?" என்றான். அதற்குப் பலியும், அதனைத் தான் வேண்டும்போது பெற்றுக் கொள்வதாகக்கூறி வாளாவிருந்தனன்.

அங்ஙனமிருக்குங்கால், அகம்பனாசாரியார் முதலிய எழுநூறு முனிவர்களும் கிரமத்தில் அந்நகர் வந்தடைந்தார்கள்.

அதனைக்கண்ட பலி, பழய த்வேஷங் காரணமாக அவர்களைக் கொல்ல நினைத்துப் பத்மராஜனிடம் சென்று தனக்கு ஏழு நாளைக்கு இராஜ்ய பதவியினையேற்று நடத்த வரம் கொடுக்குமாறு வேண்டினன். அவனும் அப்படியே செய்து, தான் அந்தப் புரத்தினையடைந்திருந்தான். அவ்வளவில் பலி, அவ்வரசையேற்று அம்முனிவர்களைக் கொல்ல, நரமேதயாகம் என்னும் யாகத்தினைச் செய்ய முற்பட்டான். இதனையறிந்த முனிவர்கள் சலனமின்றித் தைர்யமாய்த் தியானத்திலேயே நின்றிருந்தார்கள்.

இதே சமயம், மிதிலாபுரிக்குச் சமீபம் உள்ள பர்வதக் குகையில் தவஞ்செய்திருந்த ஸ்ரீ சாகரசந்திராசாரியார் என்னும் முனிவர், தம் குகையை விட்டு வெளியில் வந்து ஆகாயத்தை நோக்க, ச்ரவண (திருவோணம்) நக்ஷத்திரம் சலித்ததைக் கண்டு, தன் அவதிக்ஞானத்தால் அறிந்து, முற்கூறிய முனிவர்களுக்கு ஏற்படப்போகும் துன்பத்தினை எண்ணிப் பிரலாபித்துக் கொண்டிருந்தார். அதனை முனிவர்பால் கேட்டறிந்த ஸ்ராவக விரதத்தினைக் கைக்கொண்ட க்ஷுல்லகராகிய புஷ்பதந்தன் என்னும் வித்யாதரன், "முனிவர்களைத் தப்புவிக்க மார்க்கம் ஏதேனுமுண்டா?" வென்று ஆச்சாரியரைக் கேட்டான். அதற்கு அவர், "தரணிபூஷணம் என்னும் கிரியில் தவஞ் செய்து, விக்ரியாரித்தியை யடைந்திருக்கும், விஷ்ணு முனிவரால்தான் நிவர்த்திக்க முடியு மெனக் கூறினர். அதனைக் கேட்ட வித்யாதரன், உடனே தன் வித்தையினால் விஷ்ணு முனிவரையடைந்து வணங்கி, விஷயத்தினை விளம்பினன். விஷ்ணு முனிவரும் தம் கையை நீட்டிப் பார்க்க, அது நெடுந்தூரம் நீண்டதைக் கண்டு தனக்கு அவ்வித இருத்தி இருப்பதையறிந்து, உடனே ஆகாயமார்க்கமாய்த் தம் தமயனாகிய பத்மராஜனிடம் சென்று "முனிவர்களுக்குத் துன்பமுண்டாக்கக் காரணமென்ன?" என்று விசாரித்தார். அதனையறிந்த பத்மன், இதெல்லாம் தான் பலிக்கு இராஜ்ய பதவியைக் கொடுத்ததால் ஏற்பட்டதென்றுகூறித் துக்கப்படலானன்.

இதனை யறிந்த விஷ்ணு முனிவர், வாமன ரூபத்தையுடைய (குள்ளன்) ஒரு பிராமணனாக உருமாறிப் பலி அரசனிடம் சென்று தம் காலால் மூன்று அடி மண் யாசித்தார். அவனும் அதனைக் கொடுக்கச்சம்மதித்துத் தாரைவார்த்துக் கொடுத்தான்.

அதனையேற்ற விஷ்ணு முனிவர், தம் விக்ரியாசக்தியால் மேருவின் சிகரத்தில் ஒரு அடியையும், மானுஷோத்தர பர்வதத்தின் மிசை ஒரு பாதத்தினையும் வைத்து, மற்றொரு அடி மண் எங்குத் தருகின்றாயெனப் பலியைக் கேட்டனர். அதனைக் கண்ட பலி முதலிய எல்லோரும் பயந்து அவர் பாதத்தையே சரணமடைந் தார்கள். பலி முதலிய நால்வர்களும் முனிவர்களைத் துன்பத் தினின்றும் விடுவித்து, அவர்களை நமஸ்கரித்துப் பின் தாங்களும் ஜினதர்மத்தில் சேர்ந்து ஸ்ராவகதர்மத்தினைக் கைக்கொண்டார்கள்.

விஷ்ணு முனிவர் இவ்வாறு வாத்ஸல்லிய குணத்தினால் முனிவர்களின் துன்பத்தை நீக்கினது அறியத்தக்கது.

அஹிம்சை விரதத்தினால் சிறப்படைந்த

9. சட்டிப்புலையன் (யமபாலன்) கதை.

ஸுரம்ய தேசத்துப் பௌதனபுரத்தில் மகாபலன் என் பவன் அரசனாயிருந்தான். அப்போது ஒரு நந்தீஸ்வர ஆஷ்டான் ஹிகம் எட்டு நாளைக்கும் (அஷ்டமி முதல் பௌர்ணமி முடிய) தன் நாட்டில் யாரும் உயிர்க்கொலை செய்தல் கூடாது என்று பறைபறைவித்திருந்தான். ஆனால், அவ்வரசன் மகன் பலகுமாரன் என்பவன் மாம்சம் புசிக்கும் இச்சை உள்ளவனாகையால், ஒரு வண்ணானுடைய ஆடு ஒன்றை யாருமறியாமல் உத்யான வனத்தில் கொன்று தின்பானானன். அதனை ஒரு மரத்தின்மேல் ஒளிந்திருந்த தோட்டக்காரன் கண்டு அன்றிரவு தன் மனைவி யிடம் அதைப்பற்றிப் பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தான். அதனை அங்கு ஒற்றுக்கேட்டிருந்த அரசனுடைய சேவகர்கள் அவனைக் கொண்டுபோய் அரசன் முன்னிலையில் நிறுத்தினார்கள். அப் போது அவன் நடந்தவற்றைக் கூறினன். அரசன் கேட்டுத் தன் ஆக்ஞையை மீறி இவ்விதம் செய்த குமாரன் இருந்தென்ன பிரயோஜனம் என்று அவனைக் கொலை செய்துவிடும்படி உத்தர விட்டான். சேவகர்கள் பலகுமாரனைக் கொலைக்களத்தில் கொண்டுபோய் நிறுத்தி அரசாங்கக் கொலையாளியாகிய யம

பாலனை அழைக்கச் சென்றார்கள். அவர்கள் வருவதைக்கண்ட யமபாலன் வீட்டினுள் ஒளிந்துகொண்டு தான் வெளியூருக்குப் போயிருப்பதாகக் கூறும்படித் தன் மனைவியிடம் தெரிவித்தான். அவர்கள் வந்து கேட்டபோது அவளும் அப்படியே கூறினள். சேவகர்கள் "அந்தோ! இன்றுதானா அவன் போகவேண்டும். இன்று அரசகுமாரனைக் கொன்றால் அவன் மேலுள்ள விலை உயர்ந்த ஆடையாபரணங்கள் கிடைக்குமே" என்று கூறினார்கள். அதனைக் கேட்ட பொருளாசை பிடித்த யமபாலன் மனைவி "என் புருஷன் வெளியூருக்குத்தான் சென்றிருக்கிறார். என்ன செய்வது" என்று வெளிப்படையாக வாயாலும், "வீட்டினுள் அதோ பதுங்கியிருக்கிறான்" என்று கைஜாடையாலும் காட்டினள். சேவகர்கள் உள்ளே நுழைந்து யமபாலனைப் பிடித்துக் கொண்டுபோய் அரசன் முன்னிலையில் நிறுத்தினார்கள். அப்போது யமபாலன் அரசனிடம், "நான் ஒருசமயம் பாம்பு கடித்து மூர்ச்சையானேன். என் சுற்றத்தார்கள் நான் இறந்துவிட்டேன் என்று நினைத்து மயானத்தில் கொண்டுபோய் என்னைப் போட்டுவந்தார்கள். அப்போது சர்வௌஷதி ரித்தியைப் பெற்றிருந்த ஒரு முனிவர்மேல் பட்ட காற்று என்மேல் படவே நான் உயிர்பெற்றெழுந்து, அவரைச் சரணமடைந்து அவரிடம் சில தர்மங்களைக் கேட்டேன். அதனால் "சதுர்தசியன்று உயிர்க்கொலை செய்வதில்லை" என்ற விரதத்தைக் கைக்கொண்டேன். இன்று சதுர்தசி தினமாகையால் நான் உயிர்க்கொலை செய்ய உடன்படேன்," எனக் கூறினன். அதனைக் கேட்ட அரசன் இச்சண்டாளனுக்கு விரதமாவது என்று கோபமுற்றுத் தன் குமாரனையும் இவனையும் சேர்த்துக்கட்டி முதலைகள் நிறைந்த ஆழமான ஒரு மடுவில் தள்ளும்படி சண்டகருமன் என்னும் வேறொரு சேவகனுக்குக் கட்டளையிட்டான். "யமபாலனோ மரணமடைவதே மேல்; கொண்ட விரதத்தினை மட்டும் கைவிடலாகாது" என்று நினைத்து நிர்ப்பயனாய் ஒரு சிம்மத்தைப்போல் அசைவற்றிருந்தான். சண்டகருமனும் அரசனுத்தரவுப்படியே இருவரையுங் கட்டி ஆழமான மடுவில் தள்ளினன். அவ்வளவில் யமபாலனுடைய விரத மகிமையால் அங்கு ஜலதேவதை தோன்றி அம்மடுவின் நடுவில் ஒரு மண்டபமும், அதனுள் ஓர் இரத்தின மயமான சிம்மாசனமும் அமைத்து யமபாலனை அதிலிருத்திக்

குடை, சாமரை முதலிய அஷ்ட மகா பிராதிஹார்யங்களினல் பூஜித்தது. அதனைக் கேள்வியுற்ற அரசன் பயந்து தன்னையே நிந்தித்துக்கொண்டு, அங்கு வந்து யமபாலனை நமஸ்கரித்துத் தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். பின் அவனையழைத்து வந்து தன் சிம்மாசனத்திலிருத்தி நமஸ்கரித்து வஸ்திராபரணங்களால் பூஜித்தான்.

இவ்வாறு யமபாலன் அஹிம்ஸா விரதத்தினைக் கைக்கொண்டு அதனைக் காப்பாற்றியதால் இந்த ஜன்மத்தில் தேவதையாலும், அரசனாலும் பூஜிக்கப்பட்டு, மறு ஜன்மத்தில் மோக்ஷத்தையும் அடைந்தான்.

சத்யம் என்னும் அணுவிரதத்தால் சிறப்படைந்த
10. தனதேவ ஸ்ரேஷ்டி கதை.

ஜம்பூத்வீப பூர்வவிதேஹ புஷ்கலாவதி விஷய புண்டரீகினி என்னும் நகரில் தனதேவன், ஜினதேவன் என்ற இரு வியாபாரிகள் இருந்தார்கள். தனதேவன் ஸத்ய வசனத்தையுடைய ஸத்யசந்தன். ஜினதேவனே மிகக் கெட்ட எண்ணமுள்ளவன். ஒரு சமயம் இருவரும், "கிடைக்கும் லாபத்தைச் சம பங்கிட்டுக் கொள்வது" எனத் தமக்குள் நிர்ணயஞ் செய்துகொண்டு, வியாபாரஞ்செய்யத் தேசாந்திரம் சென்றார்கள். நல்வினைப்பயனால் அங்கு ஏராளமான லாபத்தைச் சம்பாதித்து, க்ஷேமமாகத் தங்கள் நகருக்குத் திரும்பி வந்துசேர்ந்தார்கள். பின் தனதேவன் லாபத்தில் பாதியைத் தனக்குக் கொடுக்கும்படி ஜினதேவனைக் கேட்டான். அவன் அதனைக் கொடுக்க மறுத்ததால், இருவருக்கும் சண்டையுண்டாயிற்று. "அயோக்கியர்கள் பொருளின் நிமித்தம், எந்தப் பாபகாரியத்தைத்தான் செய்யத் துணிய மாட்டார்கள்?" அதனால், தனதேவன் மிக்க துக்கத்தையடைந்து பல பெரியோர்களிடத்திலும், அரச சபையிலும் தன் வியவகாரத்தைச் சொல்லிக்கொள்ளலானன். அரசன் ஜினதேவனை யழைத்து விசாரிக்குமளவில், முன்னல் சாட்சிகளில்லை என்ற

காரணத்தினால் ஜினதேவன், "எனக்கு யுக்தமான ஒரு பாகத்தைக் கொடுப்பதாகக் கூறினேனே யல்லாது, பிரதி கொடுப்பதாகக் கூறவில்லை," என்றான். அரசன் இதனைப் பரிக்ஷிக்க வெண்ணி, இருவர் கையிலும் அக்கினியை இடும்படித் தன் சேவகர்களுக்கு உத்தரவிட்டான். ஸத்யவிரத மகாத்மியத்தால் அக்கினி தனதேவனைச் சுடவில்லை. ஜினதேவனோ அதனைத் தாங்கமுடியாமல் கைநழுவ விட்டுவிட்டான். இதனால், அரசன் உண்மையையறிந்து, ஜினதேவனுடைய சொத்துக்கள் பூராவையும் தனதேவனுக்குக் கொடுக்குமாறு கட்டளையிட்டதுடன், ஜினதேவனுக்குக் கடுமையான தண்டனைகளையும் விதித்தான்.

தனதேவன் ஸத்ய விரதமகிமையால் அரசன் முதலியோரால் நன்கு புகழ்ந்து பூஜிக்கப்பட்டான்.

அஸ்தேயம் (களவாடாமை) என்னும் அணுவிரதத்தினால் சிறப்படைந்த

11. பாரிஷேண குமாரன் கதை.

முன் 9-வது பக்கம் 6-வது **ஸ்திதிகரண** அங்கத்திற்கு உதாரணமாகச் சொல்லப்பட்டக் கதையை நோக்குக.

பிரம்மசர்ய அணுவிரதத்தால் சிறப்படைந்த

12. நீலி நங்கை கதை.

லாட தேசத்தில், பிரகுகச்சம் என்னும் நகரில், வசுபாலன் என்னும் ஓர் அரசன் அரசு செலுத்தியிருந்தான். அந்நகரில் ஜினதத்தன் என்னும் வைசியனுக்கும், அவன் மனைவி ஜினதத்தை என்பவளுக்கும் நீலி என்ற ஒரு புத்திரி இருந்தாள். இவள் மிக்க ரூபலாவண்ணியத்தையும், நற்குணத்தையும் பெற்றிருந்தாள். அதே நகரில் சமுத்திரதத்தன் என்ற ஸ்ரேஷ்டிக்கும்,

சாகரதத்தை என்ற அவன் மனைவிக்கும் சாகரதத்தன் என்ற ஒரு மைந்தன் இருந்தான்.

ஒரு நாள் நீலிநங்கை சர்வாபரண பூஷிதையாகி மிக்க அலங்காரத்துடன் ஸ்ரீ ஜினசைத்யாலயத்தை யடைந்து, பூஜை யினைச் செய்து பின் காயோத்ஸர்க்கமாய் அங்கேயே தியானத்திலிருந்தாள். அப்போது அங்கு மித்திரர்களுடன் வந்த சாகர தத்தன் அவளைக் கண்டு, அவளழகிலீடுபட்டு, "இவள் ஓர் தேவ கன்னிகையோ அல்லது மானிட ஸ்திரீதானோ" என்று ஐயமுற்றுத் தன் மித்திரர்களை உசாவினன். அதற்கவர்கள், "இவள் தேவகன்னிகையல்லள். இவள் இந்நகரிலுள்ள ஜினதத்த ஸ்ரேஷ்டியின் புதல்வியாவாள்," எனக் கூறினர்கள். அதனைக் கேட்டதும் அவன் அவளையே மணப்பது என்னும் இச்சையினை உடையவனாகித், தன் இருப்பிடம் ஏகித், தன் தகப்பனிடம் அதனைக் கூறினன். தகப்பன், "நாம் புத்த மதஸ்தர்கள். ஜின தத்தனோ ஜினமதஸ்தன். அவன் நம்மை இழிவாகக் கருதியுளன். அவ்வாறாக அவன் நமக்கு எப்படிப் பெண் கொடுப்பன்? கொடான்" என்றான். பிறகு தந்தையும் தயனுமாக ஒருவாறு யோஜித்துத் தாங்கள் ஜின மதத்தில் சேர்ந்து ஜின மதஸ்தர்களாகிவிட்டதாகப் புரட்டுகள் செய்து, ஜினதத்தனை ஏமாற்றினார்கள். ஜினதத்தனும் அதனை வாஸ்தவமென்று நம்பித் தன் பெண்ணை சாகரதத்தனுக்கு ஒரு நல்ல சுப முகூர்த்தத்தில் விதிப்படி மணம் செய்துகொடுத்தான்.

பிறகு நீலி தன் புருஷன் வீடு சென்றதும், சாகரதத்தனும் சமுத்திரதத்தனுமாகச் சேர்ந்து, அவளைத் தன் தகப்பன் வீட்டுக்குச் செல்லாதவாறு தடை செய்து, தாங்கள் முன்போல் புத்த மதானுஷ்டானங்களை அனுஷ்டிக்கலானார்கள். நீலியோ புருஷன் வீட்டிலிருந்தபடியே தான் மட்டும் ஜினமத அனுஷ்டானங்களை விடாது நடத்தி வரலானாள். இங்ஙனம் நிகழுங்கால், புத்தமத ஸ்ரவணத்தினாலும், தானத்தினாலும், ஸத் ஸம்ஸர்க்கத்தினாலும் நாளடைவில் அவள் புத்த மதத்தில் ஈடுபடுவாள் எனக் கருதித் தந்தையும் தயனும் அவளைத் தினந்தோறும் புத்தமதத் துறவிகளை வரவேற்று உபசரிக்கும்படிக் கட்டளையிட்டார்கள். அதனால் அவள் ஒரு நாள் புத்தமத ஸந்நியாசிகள் இருவரை அழைத்து

வந்து தன் இல்லத்திலிருத்தி, அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் செருப்புக்களில் ஒவ்வொன்றை எடுத்துத் துண்டுத்துண்டுகளாக நறுக்கிச் சமையல்செய்து முனிவர்களுக்கு ஆகாரதானத்தைச் செய்துவைத்தாள். ஆகாரமுண்டபின் அவர்கள் வெளியில் போகத் தங்கள் செருப்புக்களைப்பார்க்க ஒவ்வொன்றைக்காணுது, திகைத்துத் தேடலுற்றார்கள். அப்போது நீலிநங்கை அவர்களைப் பார்த்துத் தங்கள் ஞானதிருஷ்டியினால் அவை எங்குள்ளன என்று தேடலாகாதா? என்றனள். அத்தகைய ஞானம் எங்களுக்கு இன்னும் ஏற்படவில்லை என்று அவர்கள் கூறினார்கள். அதன்மேல் நீலி, "அப்படியானால் தேவரீருடைய வயிற்றில்தான் இருக்கவேண்டும். அப்படி என் வசனத்தில் நம்பிக்கை இல்லையாயின் வாந்தி செய்து பாருங்கள்" என்றாள். உடனே அவர்கள் தங்கள் கைகளைத் தொண்டையில்விட்டுப் பலாத்காரத்தினால் வாந்தியினைச்செய்ய அதில் செருப்புத்துண்டுகளைக் கண்டு அத்துறவிகளும் அவ்வீட்டிலுள்ளோரும் மிக்க துக்கத்தினையும் மானபங்கத்தையுமடைந்து, நீலிநங்கையின்மேல் துவேஷமுங் கொண்டார்கள்.

பிறகு நீலியினுடைய புருஷனின் உடன்பிறந்தாள் நீலிக்குப் பரபுருஷ கமனமுண்டென்று ஓர் பொய்ப்பெயர் புனையலுற்றாள். இதையறிந்த நீலி, ஜினபவனமடைந்து, "எனக்கிந்தப் பழி நீங்கினலல்லது நான் ஆகாரம் கொள்ளேன்," எனப் பிரதிக்ஞை செய்திருந்தாள். அவ்வாறாக அங்குப் புரதேவதை தோன்றி அவளுக்கு, "சீக்கிரமே நான் உன் பழியைப் போக்குவேன்" எனக் கூறிப் போனதுடன், அரசன் கனவிலும் "நாளைக் காலை உன் நகர்ப்புரத்துக் கதவுகள் மூடப்பட்டிருக்கும். அவை ஓர் சீல மகாத்மியத்தையுடைய ஸ்திரீயின் இடது கால் பட்டால் மாத்திரந்தான் திறக்கும்" எனக் கூறிச் சென்றது. அதன்படியே மறுநாட் காலையில் அக்கதவுகள் திறக்கக்கூடாமற் போக, அதனைக் காவலாளிகளால் அறிந்த அரசன், அந்நகரத்துள்ள எல்லா ஸ்திரிகளையும் வரவழைத்து அவர்கள் கால் படும்படிச் செய்தான். ஒருவராலும் அவை திறக்கப்படாமற் போகக் கடைசியில் நீலிநங்கையின் இடது கால் பட்டமாத்திரத்தில் திறக்கப்பட்டன. அதனைக் கண்ட அரசன் முதலிய யாவரும் சந்தோஷமடைந்து, நீலிநங்கையைப் புகழ்ந்து பூஜித்தார்கள்.

இதனால் சீலவிரத மகிமையினால் நீலிநங்கை தேவதையாலும், அரசன் முதலிய ஜனங்களாலும் போற்றிப் பூஜிக்கப்பட்டது அறியத்தக்கது.

பரிமித பரிக்கிரஹம் என்னும் அணுவிரதத்தினால் சிறப்படைந்த

13. ஜயகுமாரன் கதை.

குருஜாங்கல தேசத்து அஸ்தினாபுரத்தரசன் குருவம்சத்து சோமப்பிரபன் என்பவனுக்கு ஜயகுமாரன் என்ற ஓர் புத்திரன் இருந்தான். அவனுக்கு சுலோசனை என்ற மனைவி இருந்தாள். அவ்விருவரும் ஒருகால் பூர்வபவ ஞானமுடையவர்களாகிப் பல வித்தைகளின் உதவியால், பூர்வஜன்மத்தில் தாங்களிருந்த ஹிரண்யவர்மாவும், பிரபாவதியுமாகிய ரூபத்தை யடைந்து, மேரு முதலிய பர்வத சிகரங்களிலுள்ள அக்கிருத்திரிம ஜினசைத்யாலயங்களைத் தரிசித்து வரலானார்கள். அப்போது அவர்கள் கைலாச கிரியில் ஸ்ரீ பரதேஸ்வர சக்கரவர்த்தியால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இருபத்துநான்கு ஜின தீர்த்தங்கரர்களின் பிம்பங்களைப் பூஜித்தார்கள். அது சமயம் சௌதர்மேந்திரன் என்ற இந்திரன் சபையில் "பரிக்கிரஹபரிமாண விரதத்தில் ஜயகுமாரனே மிக்கான் எனப் பேசப்பட்டது. அதனைப் பரிக்ஷிக்கவெண்ணிய இரவிப்பிரபன் என்ற அமரன், மிக்க ரூபலாவண்ணிய யௌவன ஸ்திரீ ரூபங்கொண்டு விலாஸினி முதலிய இதர ஸ்திரீகளுடன் அங்கு ஜயகுமாரன் முன் தோன்றி, "நான், நின் மனைவி சுலோசனையின் ஸ்வயம்வர சமயத்தில் உம்மோடு சண்டையிட்ட நமி என்ற வித்யாதரனுடைய மனைவியாவேன். என் பெயர் சுரூபை என்பதாகும். என்னைத் தாங்களையும் பக்ஷத்தில் அநேக வித்தைகளை யடைவதுடன் இராஜ்யமும் கிடைக்கும்" எனக் கூறினள். அதற்கு ஜயகுமாரன், "ஏ, ஸ்திரீயே! சுலோசனையைத் தவிர வேறு ஸ்திரீகள் எனக்குத் தாய்க்குச் சமானமானவர்கள்" என்று கூறினன். உடனே அமரன் ஸ்திரீ ரூபத்தினால் அவனை ஆலிங்கனஞ் செய்தல் முதலிய பல சேஷ்டைகளைச் செய்தும்

அவன் தன் நிலையில் தளராது நின்றான். அதனைக் கண்ட தேவன் தன் ஸ்வயரூபத்தைக் காட்டித் தன் வரலாற்றினையுங் கூறி, வஸ்திராபரணங்களால் அவனைப் பூஜித்துத் தன்னிருப்பிடமடைந்தான்.

இதனால் ஜினதத்தன், பரிக்கிரஹ பரிமாண விரதத்திற்கு உதாரணமாகக் கூறப்பட்டான்.

கொலையினால் கேடடைந்த
14. தனஸ்ரீ கதை.

லாட தேசத்தில் குருகச்சமென்னும் நகரில் லோகபாலன் என்பவன் அரசு செலுத்தி வந்தான். அப்போது அந்நகரில் தனபாலன் என்ற வைசியனும், தனஸ்ரீ என்னும் அவன் மனைவியுமிருந்தார்கள். இவர்களுக்குச் சுந்தரி என்னும் ஒரு குமாரியும், குணபாலன் என்ற குமாரனும் இருந்தார்கள். இவ்விரு குழந்தைகளும் பிறப்பதற்குமுந்தியே தனபாலனால் எடுத்து வளர்க்கப்பட்ட குண்டலன் என்ற ஒரு வாலிபனும் இருந்தான். கொஞ்சநாளில் தனபாலஸ்ரேஷ்டி இறந்துபோகத் தனஸ்ரீயாகிய அவன் மனைவி தன் வளர்ப்புப் பிள்ளையான குண்டலனுடன் இஷ்ட விஷய காமபோகங்களில் பிரவர்த்திக்கலானாள். இது விஷயம் குணபாலனுக்கும் தெரியவந்தது. இவ்வளவில் தனஸ்ரீ குண்டலனையழைத்து, "குணபாலன் நம் நடத்தையில் சந்தேகங் கொண்டு வெறுப்புற்றிருக்கிறான். சிறிது காலத்தில் அவனால் நமக்கு இடையூறுகள் ஏற்படக்கூடும். ஆகையால் அவனை நாளைக்காலை விடிவதற்குள் நம் மாடுகளை அடுத்தக் காட்டுக்கு ஓட்டிவரச் செய்கிறேன். அங்குச்சென்று நீ அவனைக் கொன்று வருவாயானால் நாம் சௌக்கியமாய் வாழலாம்" என்று இரகசியமாய்க் கூறினாள். இதனை ஒற்றுக்கேட்டிருந்த சுந்தரி, குணபாலனிடம் தெரிவித்து ஜாக்கிரதையாயிருக்குமாறு எச்சரித்தாள். மறுநாள் அவ்வாறே தனஸ்ரீயால் அனுப்பப்பட்ட குணபாலன் மாடுகளை ஓட்டிப் போய்க் காட்டில் மேயவிட்டு அங்குக் கிடந்த

ஒரு கட்டையின்மேல் தன் வேஷ்டியை மூடித் தான் ஓரிடத்தில் பதுங்கியிருந்தான். உடனே அங்கு வந்த குண்டலன், குண பாலன் படுத்திருக்கிறுன் என்றெண்ணி, அக்கட்டையைத் தன் கைவாளால் வெட்டினுன். திடீரெனக் குணபாலன் பாய்ந்து அவன் கத்தியைப் பிடுங்கி அவனை வெட்டிவிட்டு அக்கத்தியுடன் வீடு திரும்பினுன். அவனைக் கண்டதும் தனஸ்ரீ, "குண்டலன் எங்கே?" என்று வினவினள். அதற்கு அவன் "இக்கத்தியைக் கேள். அது கூறும்" என்றுன். இரத்தம் தோய்ந்த அக்கத்தி யைக் கண்டதும், குண்டலனை இவன் வெட்டிவிட்டான் என யோஜித்துச் சரேலென்று அக்கத்தியைப் பிடுங்கிக் குணபாலனை வெட்டித் தீர்த்தாள். உடனே சுந்தரி அங்கிருந்த உலக்கையை எடுத்து ஓங்கித் தன் தாயின் மண்டையிலடித்தாள். இக்கலக் கத்தில் அரசாங்கச் சேவகர்கள் அங்கே வந்து அவர்களை இழுத் துப்போய் அரசன் முன் நிறுத்தி, நடந்ததைக் கூறினுர்கள். அரசனும் நன்கு விசாரித்துத் தனஸ்ரீக்குச் சகித்தற்கரிய கடுந் தண்டனைகளை விதித்தான். அத்துடன் தனஸ்ரீ பலராலும் இகழப்பட்டும், பல துன்பங்களை யனுபவித்தும் துர்க்கதியை யடைந்தாள்.

பொய்யினுல் கேடடைந்த
15. சத்தியகோஷன் கதை.

ஜம்பூத்வீபத்துப் பரத க்ஷேத்திரத்தில் சிம்மபுரமென்ற நகரத்தரசன் சிம்மசேனன்பால் ஸ்ரீபூதி என்னும் பிராமணன் மந்திரியாயிருந்தான். அவன் சத்திய வசனத்தையே யுடையவ னுகையால் அவனுக்குச் சத்தியகோஷன் என்னும் பெயர் வழங்க லாயிற்று. இவ்வாறிருக்கும் நாளில், பத்மஷண்டபுரம் என்ற நகரினின்றும் பத்ரமித்திரன் என்ற வணிகன் இரத்தினத்வீபம் முதலிய தீபாந்தரங்களிற் சென்று மிக்க திரவியத்தைச் சம்பா தித்துத் திரும்பி வரும் வழியில் இச் சிம்மபுரத்தை வந்தடைந் தான். அவ்வளவில் அவன் அங்கேயே வசிக்க எண்ணித் தன் உற்றுர் உறவினர்களை அங்கு அழைத்து வந்துவிட உத்தேசித்

தான். அப்போது தன்னிடமுள்ள ஒரு விலையுயர்ந்த இரத்தினச் செப்பை அங்குச் சத்தியசந்தனாய் விளங்கிய சத்தியகோஷனிடம் இரகசியமாய்க் கொடுத்துப் பத்திரப்படுத்திவிட்டுத் தன் ஊருக்குச்சென்றான். அங்கிருந்து தன் உற்றார்களையழைத்து வந்ததும் வணிகன் சத்தியகோஷனிடம் சென்று தன் செப்பைக் கொடுக்குமாறு கேட்டான். சத்தியகோஷனோ அதனைத் தான் அடைய எண்ணி அவ்வணிகனிடம் "நீ என்ன பைத்தியக்காரனா? உன்னை யாவது உன் இரத்தினச் செப்பையாவது கண்டது யார்?" என்று மிரட்டி விரட்டிவிட்டான். பின் பத்ரமித்திரன் அதனை அரசனிடமும் கூறினன். அரசன் சத்தியகோஷனை விசாரிக்க, அவனும் தான் அதனைக் கண்டதேயில்லை. இவனோர் பைத்தியம்போலும் என்று அரசன் நம்பும்படிக் கூறினன். அதனைக் கேட்டு அரசன் அதற்குமேல் ஒன்றுஞ் செய்யாது விட்டான். அதனால், அவ் வணிகன் நாள்தோறும் கண்ட இடங்களிலும் இதைப்பற்றிக் கூறிப் பின் அரண்மனையின் எதிரிலுள்ள ஒரு மரத்தின்மேல் நின்று எல்லோரும் கேட்கும்படி சத்தியகோஷனின் செய்கையை உரத்துக் கூவிக்கொண்டே இருந்தான். அதனைக் கேட்ட இராஜ பத்னியாகிய இராமதத்தாதேவி, "இவன் உன்மத்தனாயின் கண்ட விஷயங்களைக் கண்டபடி உளறுவன். ஆயின், இவன் ஒரே விஷயத்தினை முன் பின் மாறாது ஒரே விதமாய்க் கூறுகின்றானையால் உன்மத்தனாயிரான்" எனக் கருதி அவனைத் தன் எதிரில் வரவழைத்து விசாரித்து உண்மையையறிந்து பின் அதனைக் கண்டுபிடிக்க உத்தேசித்தனள். அதனால் அவள் அரசனிடம் உத்தரவு பெற்று, மந்திரி சத்தியகோஷனுடன் சூதாடி அவனைத் தோற்கடித்து அவன் மோதிரம், யக்ஞோபவீதம் முதலியவற்றை ஜயித்தாள். அவைகளை மந்திரியறியாமல் அப்போதே தன் தோழி நிபுணமதி என்பவளிடம் கொடுத்து, மந்திரியினுடைய பாண்டாகாரியினிடமனுப்பி, அவைகளைக் காண்பித்து, பத்ரமித்திரனுடைய இரத்தினச்செப்பை வாங்கி வரும்படி மந்திரி கூறினதாகக் கூறச்சொன்னாள். அவளுமப்படியே சென்று தன் சுய சாமர்த்தியத்தினால் பாண்டாகாரியை ஏமாற்றி அச்செப்பை வாங்கிவந்து அரசியிடம் கொடுத்தாள். அரசியும் அதனை அரசனிடம் சேர்த்தாள். அதனைக்கண்டு அரசன் மிக்க கோபத்தையடைந்து மந்திரிக்குக் கடுமையான தண்டனைகளை

விதித்து, அவன் சொத்துக்களையும் பறிமுதல்செய்து அவனையும் நாட்டைவிட்டு ஓட்டினன். பின் அரசன் பல இரத்தினச் செப்புகளுடன் சேர்த்து அந்த இரத்தினச் செப்பையும் வைத்து பத்ரமித்திரனையழைத்து அவன் செப்பை எடுத்துக்கொள்ளும் படிக் கூறினன். வணிகனும் அவற்றுள் தன்னுடையதையே தேடி எடுத்தான். அதனைக்கண்ட அரசன் சந்தோஷங்கொண்டு அவனுக்குப் பல பரிசுகளையும், ஸ்ரேஷ்டி முக்கிய பட்டத்தையு மளித்தான். சத்தியகோஷனே சத்தியமின்மையால் பல துன்பங்களை யனுபவித்துப் பின் காலாந்தரத்தில் மரித்து அரசன் பாண்டாகாரத்தில் அகந்தன் என்னும் சர்ப்பமாகப் பிறந்தனன். இக்கதை மேருமந்தரபுராணம் மூன்றுவது பத்ரமித்திரன் சருக்கத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

களவினுல் கேடடைந்த
16. உறித்தாபஸன் கதை.

வத்ஸ தேசத்தில் கௌசம்பி என்னும் நகரில் சிம்மரதன் என்னும் அரசன் அரசுபுரிந்து வந்தான். அந்நகரின் புரத்தில் ஒரு திருடன் அன்னியருடைய பூமியைக்கூட மிதிப்பதில்லை என்று தோன்றும்படி, ஓர் ஆலமரத்தில் உறியொன்றைக் கட்டி, அதிலிருந்துத் தவம் செய்வதுபோல் பகல் முழுதும் நடித்து, இரவு நடுயாமம் ஆனதும் அதன் நின்றும் நீங்கி நகரினுள் சென்று, பல பொருள்களைத் திருடி வந்து ஓரிடத்தில் புதைத்து வைத்துக்கொண்டிருப்பானுன்.

நகரில் திருட்டு அதிகமானதைக் கேள்வியுற்ற அரசன், காவலர் தலைவனைக் கூவி, "இன்று முதல் ஏழு நாளைக்குள், அத்தகைய மாயத்திருடனை நீ கண்டுபிடிக்காவிடில் சிரச்சேதம் செய்யப்படுவாய்" என்று உத்தரவிட்டான். அப்படியே அவன் இரண்டு நாள் முயற்சித்தும் பயன்படாதுபோக, மூன்றும் நாள் மிகக் கவலையுற்றுத் தன் வீட்டில் தங்கினன். அப்போது ஒரு பிராம்மணன் அங்குவந்து அவனை அன்னம் இடுமாறு யாசித்தான். அப்போது தளவரன், "என் உயிருக்கு ஆபத்து நேரிட

இருக்கும் இச்சமயத்தில் நீ போஜனம் யாசிக்கின்றாய். என்ன சொல்வதென்று எனக்கொன்றும் விளங்கவில்லை," என்று கூறினன். அதைக் கேட்ட பிராம்மணன் நிகழ்ந்த வரலாறுகளை அவன்பால் கேட்டு உணர்ந்தான். பின்பு அப்பிராமணன் "சரி, அவ்வுறித்தாபசனே கள்வன் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். சற்று என் கதையைக் கேட்பாயாக," என்றுக் கூறலுற்றான்.

i "என் மனைவி, பிற புருஷர்கள் தன்மேல் படக்கூடாது என்ற கொள்கையினால், தன் பிள்ளைக்குப் பால்கொடுக்கும்போது கூட, பிள்ளையின் சரீரம் தன் மேல் படாதபடிச் சேலையால் தன்னுடம்பை மூடிக்கொள்வாள். இவ்வித மாயச் செய்கையைக் கண்ட நான், இவள் மிக்க பதிவிரதை என்றே நம்பியிருந்தேன். ஆனால் அவள் என்னை ஏமாற்றி, ஒரு நாள் இரவில், ஒரு மாட்டிடையனுடன் சம்மந்தப்பட்டிருந்ததை நான் நேரில் கண்டு வெறுப்படைந்து சந்நியாசியானேன்.

ii அப்போது என்னிடமிருந்த திரவியத்தை ஒரு பொன் கம்பியாகச் செய்து அதை ஒரு கைத்தடியில் அடக்கஞ் செய்து ஊன்றுகோலாக உபயோகித்து வந்தேன். சிறிது நாளில் என்னுடன் வந்துசேர்ந்த வாலிபன் ஒருவன், நான் தூங்கும் போது அக்கழியை என் வயிற்றின்கீழ் வைத்துக்கொள்வதைக் குறிப்பாய் அறிந்துகொண்டான். அன்று முதல் அவன், தான் பிறர் பொருளைத் துரும்புகூட இச்சியாதவன் என்று நான் நம்பும்படி, நடந்துகொண்டு வரலானன். இவ்வளவில் ஒரு நாள் இரவு, ஒரு நகருக்குச் சமீபம் செல்லும்போது அவன், "இருள் அதிகமாயிருக்கிறது. தாங்கள் இங்கேயே தங்கியிருங்கள். நான் சென்று நகரில் பிக்ஷை வாங்கிவருகிறேன்" என்று சொல்லிச் சற்று தூரம் சென்றதும், திரும்பிவந்து, "நகரில் நாய்கள் உபத்திரவம் அதிகமாயிருப்பதால், சற்றுத் தடியைக் கொடுங்கள்," என்று கேட்டான். இதை மாயமென்று அறியாமல் நான் கழியைக் கொடுத்துவிட, அதை எடுத்துப்போனவன் நாளது வரையில் திரும்பவேயில்லை.

iii பிறகு நான் ஒரு காட்டின் வழியே செல்லும்போது, சில பக்ஷிகள் ஒன்றுசேர்ந்து ஒரு கிழப் பக்ஷி சொல்லைக்கேட்டு,

அதன் அலகைக் கட்டிவிட்டுத் தங்கள் குஞ்சுகளுக்குக் காவலாய் அதை வைத்துவிட்டு, அவைகள் இரைதேடச் சென்றன. அப் பக்ஷிகள் அப்பால் சென்றதும் கிழப் பக்ஷி அக்கட்டைத் தன் கால்களால் கழற்றி வைத்துவிட்டு, அக்குஞ்சுகளில் வேண்டிய மட்டும் புசித்துவிட்டுப் பின் பக்ஷிகள் வருவதற்குள், கட்டை முன்போல் மாட்டிக்கொண்டு, மிக யோக்கியமுள்ளதைப்போல் நடித்ததைக் கண்டு ஆச்சரியமுற்றேன்.

iv அப்பால் நான் செல்லுங்கால் வழியில், அபஸரன் என்ற கள்வனொருவன் தன் தலையில் பெரிய கல் ஒன்றை வைத்துக்கொண்டு பகல் முழுதும் தவஞ்செய்வதாக நடித்து, இரவு வந்ததும் அவ்வழியே செல்லும் பிரயாணிகளின் தலையில் அக் கல்லைப் போட்டுக் கொன்றுவிட்டு, அவர்களிடமுள்ள பொருள் களை யபகரித்துவருவதை, நேரில் கண்டு நான் ஆச்சரியமடைந் தேன்.

இவற்றால் இவ்வுறித்தாபஸனே ஒருக்கால் கள்வனாகயிருத்தல் கூடும். அதனை நானே கண்டுபிடிக்கிறேன் என்றான். அப்படியே அப்பிராமணன் அவ்வுறித்தாபஸன் இருக்குமிடஞ் சென்று, தான் ஒரு பொட்டைபனாக நடித்து அங்கேயே தங்கினான். அதனைக்கண்ட உறித்தாபஸன், அவனெதிரில் வந்து, அவனை வெட்டுவதுபோலும், குத்துவதுபோலும் கைஜாடைகள் காட்டிச் சோதிக்க, அவன் ஒன்றுந் தெரியாதுபோல் நடித்தான். அதனை உண்மையென்று நம்பிய உறித்தாபஸன், அவனை விட்டுத் தன் வழக்கம்போல் அன்றிரவு உறியைவிட்டிறங்கித், தன் பொருள் களையெல்லாம் ஒளித்துவைத்திருக்கும் இடத்தில் போய்ப் பார்த்து அவைகளைப் பத்திரப்படுத்திவிட்டு, மறுபடியும் உறியின் மேல் ஏறிக்கொண்டான். இதையெல்லாம் அறிந்துகொண்ட பிராமணன், மறுநாள் தளவாரனிடம்வந்து கூற, அவனும் பல ஆட்களுடன் சென்று அவ்வுறித்தாபஸனைப் பிடித்து, அவனால் களவாடிச் சேர்த்துவைக்கப்பட்ட பொருள்களுடன் அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தினான். அவனுக்கு அரசன் பல கடுமையான தண்டனைகளை விதிக்க, அதனால் அவன் துக்க மடைந்து மரித்து, மறு ஜன்மத்தில் துர்க்கதியை யடைந்தான்.

காமத்தினுல் கேடடைந்த
17. யமதண்டன் கதை.

அஹீர தேசத்தில் நாசிக்ய நகரத்தில், கனகரதன் என்ற அரசனும், கனகமாலை என்ற அவன் மனைவியும் அரசுசெலுத்தியிருந்தபோது, அந்நாட்டில் யமதண்டன் என்ற ஒரு தளவரன் இருந்தான். அவன் சீலாசாரம் கொஞ்சமேனும் இல்லாதவன். அவனுடைய தாயாராகிய வஸுந்தரி என்பவளும் விபசாரித்வமுள்ளவளாய் இருந்தாள். அவள் ஒருநாளிரவு, தன் மருமகள் இடத்தில் சில ஆபரணங்களை வாங்கித் தன்னை யலங்கரித்துக் கொண்டு, பரபுருஷ சேவை செய்யும்பொருட்டுக் குறிப்பிட்ட ஓர் இடத்துக்குச் சென்றுள். யமதண்டனும் முந்தியே அவ்விடத்துக்குத் தன்பாட்டில் சென்றிருந்தான். அங்கு இருட்டில் அவர்கள் ஒருவரையொருவர் அறியாமல், காமசேவை செய்தனர். பின் அவள் அவனுடைய அன்பைப் பெறவேண்டித் தான் அணிந்திருந்த நகைகளில் ஒன்றை அவனுக்குக் கொடுத்தாள். அவன் அதை வாங்கிப்போய்த் தன் மனைவி கையில் கொடுத்தான். அதைக்கண்ட அவன் மனைவி, "இது என்னுடைய நகையாயிற்றே. நேற்று சாயங்காலம் என் மாமியார் கேட்டதனுல் கொடுத்தேன்" என்றுள். அதைக்கேட்ட தளவரன் முந்தினநாள் தான் சேர்ந்திருந்த ஸ்திரீ, தன் தாய்தான் என்று அறிந்தான். இருந்தாலும், மகா பாபியாகிய அவன் அதே காரியத்தை மறுநாள் முதற்கொண்டும் செய்துவரத் தலைப்பட்டான். இது விஷயம் அவன் மனைவிக்கும் தெரியவந்தது. அவள் ஒரு நாள் புருஷன்மேல் கோபமாயிருந்த சமயம், அங்கு வந்த வண்ணாத்தியிடம் அதுவிஷயத்தைக் கூறிவிட்டாள். வண்ணாத்தி பூக்காரியிடம் அதைத் தெரிவித்தாள். பூக்காரி பூக்கட்டிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றபோது கனகமாலை அரசியார் அப்பூக்காரியை, "ஊரில் ஏதேனும் விசேஷமுண்டா?" என்று கேட்டாள். அப்போது அப்பூக்காரி இத்தளவரன் விஷயத்தை அரசியிடம் கூறினள். அரசி ஆச்சரியமுற்று அரசனிடம் அதைத் தெரிவித்தாள். அரசன், உடனே அதன் உண்மையைத் தன் ஒற்றர்களைக்கொண்டு கண்டுபிடித்து, அவ்விருவர்களுக்கும் பல துன்பங்களும், மானக்கேடும் உண்டாகத் தக்க

தண்டனைகளை விதித்தான். தனவரனும், அவன் தாயும் அத் தண்டனைகளை யனுபவித்துக் கஷ்டப்பட்டுப் பின் மரித்துத் துர்க்கதியை அடைந்தார்கள்.

பரிமித பரிக்கிரஹமின்மையால் (பேராசையால்) கேடடைந்த
18. தாடி வெண்ணெய்க்காரன் கதை.

இப் பரதகண்டத்து அயோத்திமா நகரில் பவதத்தன் என்ற ஒரு வர்த்தகனுக்கும், தனதத்தை என்ற அவன் மனைவிக்கும், உலுப்ததத்தன் என்ற ஒரு குமாரன் இருந்தான். அவன் பல தீவாந்தரங்களைச் சுற்றி, வேண்டிய திரவியங்களைச் சம்பாதித்துக் கொண்டு திரும்பி வரும்போது, வழியில் திருடர்கள் அவனை மறித்து அவன் பொருள்களைக் கவர்ந்து சென்றார்கள். உலுப்தன் கைச்செலவுக்கும் பொருளின்றி அலைந்து திரியலானான். அவ் வளவில், அங்கோர் இடைச்சியினிடம் கொஞ்சம் மோர் வாங்கிக் குடித்தான். அப்போது அவன் தாடியில் கொஞ்சம் வெண்ணெய் ஒட்டிக்கொள்ள அதனை எடுத்துப்பார்த்து, இவ்விதமே தினமும் செய்து வெண்ணெயைச் சேகரிக்கத் தீர்மானித்தான். அவன், அங்கோர் குடிசையையமைத்து அதிலிருந்துகொண்டு, அவ் வழியே செல்லும் மோர்க்குடங்களில் பல உபாயங்களால் தன் தாடியை நனைத்து, வெண்ணெய் எடுக்கலானான். அதனால் அவனுக்குத் தாடி வெண்ணெய்க்காரன் என்ற பெயரும் உண்டா யிற்று. இவ்வாறாக, அவன் நாளடைவில் ஒரு சேர் வெண் ணெயைச் சேர்த்து ஓர் கலயத்திலிட்டு, அதனைக் குடிசையில் ஓர் இடத்தில் உறி ஒன்றைக் கட்டி, அதில் வைத்துக் காப்பாற்றி வரலானான். அப்போது குளிர்காலமானதால் அவ்வுறியின் அடியில் தன் காலுக்கு நேராக, ஓர் அக்னிச்சட்டியை வைத்துத் தான் படுத்துக்கொண்டு யோசிக்கலுற்றான். அதாவது:— இவ் வெண்ணெயை விற்றுக் கிடைக்கும் பணத்தைக்கொண்டு, நான் ஜவுளி முதலிய வியாபாரங்களைச்செய்து, ஏராளமாகப் பொருளைச் சேர்த்துப் பெரிய கப்பல் வியாபாரியாகலாம். பின் கிரமத்தில் தீவாந்தரங்களிற்சென்று பெருந்தனத்தைச் சேர்த்து நான்

அரசனுகவும், சக்கரவர்த்தியாகவும் ஆகலாம். அப்போது ஏழடுக்கு உப்பரிகையின்மேல் நான் பஞ்சணைமெத்தையில் படுத்திருக்குங்கால், சுபலக்ஷணமுள்ள ஸ்திரீ இரத்தினம் எனக்கு மனைவியாகவமைந்து கால் பிடிப்பாள். அக்கால், விளையாட்டாக அவளுக்குக் கால் பிடிக்கத் தெரியவில்லை என்று இப்படி உதைப்பேன் என்று ஓர் உதை உதைத்தான். அவ்வளவில், அவ்வுதை உறியின்மேல் பட்டு, வெண்ணெய் அக்னிச்சட்டியில் விழுந்தது. தீ, குடிசையின் முன்னும் பின்னும் பிடித்து எறிந்தது. அதனின்றும் வெளிவர இயலாது உலுப்தன் உள்ளேயே அகப்பட்டுத் தீவாய்ப்பட்டு இறந்தான். அவனுடைய துர் எண்ணத்தின் பலனுக நரககதியை அடைந்தான்.

ஆஹார தானத்தால் சிறப்படைந்த

19. ஸ்ரீஷேண மகாராஜன் கதை.

மலைய தேசத்தில், இரத்தினசஞ்சயபுரம் என்ற நகரில் ஸ்ரீஷேண மகாராஜன் அரசனுயிருந்தான். அவனுக்கு ஸிம்ம நந்திதை, அநிந்திதை என்ற இரு மனைவியரும், இந்திரன், உபேந்திரன் என்ற இரு குமாரர்களும் இருந்தார்கள். அந்நகரில் ஸாத்யகி என்ற பிராமணன் தன் மனைவி ஜம்பு, புத்திரி ஸத்யபாமை இவர்களுடன் வசித்திருந்தான்.

பாடலிபுத்திர நகரத்தில், ருத்திரபட்டன் என்ற ஒரு பிராமணன், சில பிள்ளைகளுக்கு வேதபாடம் கற்றுவைத்துக்கொண்டிருந்தான். அவனுடைய தாசியின் வயிற்றில் பிறந்த கபிலன் என்பவன், வேத பாடங்கள் சொல்லிக்கொடுக்கும்போது அதைக் கேட்டிருந்து அதில் மிக்க தேர்ச்சியுற்றுன். அதைக் கண்ட ருத்ரபட்டன், அவன் வேதசாஸ்திரம் கற்பது தகுதியில்லை என்று நினைத்து, அவனைப் பட்டணத்தினின்றும் துரத்திவிட்டான். ஆயினும், அவன் யக்ஞோபவீதமணிந்து பிராமண கோலத்துடன் இரத்தினசஞ்சயபுரம் அடைந்தான். அங்கே இவனுடைய வித்வத்தையும், தேகவனப்பையுங்கண்ட ஸாத்யகி, இவனைப் பிராமணனென்றே நினைத்துத் தன் வீட்டிற்கு அழைத்

துப்போய்த், தன் பெண் சத்யபாமையைக் கல்லியாணம் செய்து கொடுத்துத் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டான். பின் சத்யபாமை, ரதிகாலத்தில் கபிலனுடைய அசுப சேஷ்டைகளைக் கண்டு இவன் ஒரு பிராமணனாயிரான் என்று தீர்மானித்து, வருத்தப்பட்டிருந்தாள்.

இவ்வாருக, ருத்திரபட்டன் தீர்த்த யாத்திரையில் கிளம்பிப் பல க்ஷேத்திரங்களைத் தரிசித்துப் பின் இந்த நகருக்கு வந்து சேர்ந்தான். அவனைக்கண்ட கபிலன் நமஸ்கரித்துத் தன் வீட்டிற்கு அழைத்துப்போய்த், தன் தகப்பனென்று ஸத்யபாமைக்கு அறிமுகப்படுத்தி, அவனுக்கு அமுதளிக்குமாறு கூறினான். பின் சிலநாள்அவனை அங்கேயே தங்கவும் வைத்திருந்தான். அப்படித் தங்கியிருக்கையில், ஒருநாள் ஸத்யபாமை அவனுக்கு விசிஷ்டான்னங்களைச் செய்துபோட்டுச் சில திரவியங்களையுங் கொடுத்தாள். பிறகு அவள், அவன் காலைப் பிடித்துக்கொண்டு "ஐயா, என் பர்த்தாவாகிய கபிலனுக்கு உம்முடைய பழக்கங்கள் ஒன்றும் இல்லையே; இவன் பிராமணனல்லனோ?" என்று உருக்கமாகக் கேட்டாள். ருத்திரபட்டன் அவள்மேல் இரக்கங்கொண்டு, கபிலன் தன் தாஸியினுடைய புத்திரன் என்பதை வெளிப்படுத்தினன். இதன்மேல் ஸத்யபாமை, ஓர் ஈனக்குலத்தானுடன் சேர்ந்து வாழ்வதைக்காட்டிலும் விஷத்தைத்தின்று இறப்பதே மேலென்று நினைத்தாள். ஆயினும், தனக்குச் சீலபங்கம் நேரிடாதிருக்க, அந்நகரத்து அரசியான சிம்மநந்திதை என்பவளிடம் அடைக்கலமாகச் சரணமடைந்தாள். அரசியும் அவளைத் தன் புத்திரிபோல் பாவித்துக் காப்பாற்றி வரலானாள்.

அவ்வாறிருக்க, ஒருநாள் அங்குவந்த அர்க்ககீர்த்தி, அமிதகதி என்ற இரு சாரணமுனிவர்களுக்கு அரசனும் அரசியும் பக்தியுடன் விதிப்படி ஆகாரதானம் செய்தார்கள். அதனால் அவர்களும், அவ்வாகார தானத்துக்கு உடந்தையாயிருந்த காரணத்தினால் ஸத்யபாமையும் உத்தம போகபூமியில் போய்த் தேவர்களாய் பிறந்தார்கள்.

ஸ்ரீஷேண மகாராஜன் தேவசுகங்களை யனுபவித்துப் பின் கிரமத்தில் ஸ்ரீ சாந்திநாதர் என்ற 16-வது தீர்த்தங்கரராக ஆனார்.

ஔஷத தானத்தால் சிறப்படைந்த

20. விரஷபஸேனை கதை.

ஜனபதம் என்ற தேசத்தில் காவேரி என்னும் நகரில் ராஜா உக்ரஸேனன் என்பவன் நாடாண்டிருந்தான். அப்போது அந்நகரில் தனபதி என்ற ஸ்ரேஷ்டி, தன் மனைவி தனஸ்ரீ, புத்திரி விரஷபஸேனை, அவள் தோழி ரூபவதி என்ற இவர்களுடன் வாழ்ந்திருந்தான்.

ஒருநாள் விரஷபஸேனை ஸ்நானம் செய்த ஜலத்தில் வியாதியுள்ள ஒரு நாய் விழுந்துபுரள, அதன் நோய் நீங்கிற்று. இதனைக் கண்ட தோழி ரூபவதி, அதைப் பரீக்ஷிக்கவெண்ணி, அந்த ஜலத்தைப் பன்னிரண்டு வருஷங்களாகக் கண் தெரியாமலிருந்த தன் தாயாருடைய கண்களில் தடவ அவளும் கண் பெற்றுச் சௌக்கியமடைந்தாள். இவ்வாறாக, அவள் அன்றுமுதல் அந்த ஜலத்தைக் கொண்டு பல நோய்களைத் தீர்க்கத் தலைப்பட்டாள். அதனால் அவள் பெயர் அந்நகர் எங்கும் பரவிற்று.

இஃதிவ்வாறாக, உக்ரஸேனராஜன் தன் விரோதியான மேக பிங்களன் என்பவனை ஜயித்துவரத், தன் மந்திரி பிங்களன் என்பவனை அனுப்பினான். அவன் சத்துருவின் தேசத்துக்குச் சென்றதும் விஷஜ்வரம் கண்டு, சண்டையிடாமல் திரும்பிவரவேண்டியதாயிற்று. அவனும் ரூபவதி கொடுத்த ஜலத்தினால் சௌக்கியமடைந்தான். பின் உக்ரஸேனன், மந்திரியைக் கோபித்துத் தானே சண்டைக்குச் செல்ல, அவனும் நோய்வாய்ப்பட்டுத் திரும்பவேண்டியதாயிற்று. அப்போது அரசன், ரூபவதி ஜலத்தைக்கொண்டு நோய்தீர்க்கும் விஷயத்தையறிந்து, அவளை அந்த ஜலம் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தான். "புத்ரி ஸ்நானஞ்செய்த ஜலத்தை அரசன் தலையில் தெளிப்பது தகுமா?" என்று, ரூபவதி ஸ்ரேஷ்டியுடனும் அவன் மனைவியுடனும் யோஜிக்கலுற்றாள். அப்போது ஸ்ரேஷ்டி, "அதனால் பாதகமில்லை. பின்னால் அரசன் கேட்டால் உண்மையைத் தெரிவித்துவிடலாம்" என்று கூறவே, ஜலத்தைக் கொண்டுபோய்த்தெளிக்க அரசனும் சௌஸ்தமடைந்தான். பின்னர், அரசன் ரூபவதியை அழைத்துக்கேட்க, அவ

ளும் விரஷபஸேனையின் விசேஷத்தைக் கூறினள். அதனைத் தெரிந்து அரசன், ஸ்ரேஷ்டியை அழைத்துப் பல மரியாதைகள் செய்து, விரஷபஸேனையைத் தனக்கு விவாஹம் செய்துகொடுக்கும்படிக் கேட்டான். அதற்கு ஸ்ரேஷ்டி, ஒரு ஆஷ்டான்ஹிக சமயம் ஸ்ரீ கோவிலுக்கு ஆராதனுபிஷேகங்களைச் செய்து, கூட்டிலடைக்கப்பட்ட பக்ஷிகளையும், சிறையிலடைக்கப்பட்டக் கைதிகளையும் விடுவிப்பதானல் தன் பெண்ணைக் கொடுப்பதாகச் சொல்ல, அரசனும் அவ்வாறே செய்தனன். ஸ்ரேஷ்டியும் விரஷபஸேனையை விதிப்படி விவாஹம் செய்துகொடுக்க, அரசன் அவளைப் பட்டமகிஷியாக்கினன்.

அரசன், சிறைக்கூடத்திலிருந்து கைதிகளை விட்ட காலத்தில் தவறுதலால், வாரணசி நகரத்தரசன் பிரத்விசந்திரன் மட்டும் விடப்படாமலிருந்தான். அதனல் வருத்தமுற்றிருந்த அவன் மனைவி நாராயணதத்தை என்பவள் தன் மந்திரிகளுடன், தன் பர்த்தாவை விடுவிக்க உபாயங்களை யோஜித்துத் தன் நகரில் விரஷபஸேனை பெயரால் ஓர் அன்னசத்திரம் ஏற்படுத்திப் பல ஜனங்களுக்கும் அன்னமிட்டுவந்தாள். அங்கிருந்துவந்த சிலரால் அதனைக் கேள்வியுற்ற ரூபவதி அரசியிடஞ் சென்று, "எனக்குத் தெரிவிக்காமல் எப்போது அவ்வித அன்னசத்திரம் கட்டினய்?" என்று கேட்டாள். அரசி, "தனக்கு ஒன்றுந்தெரியாது; வேறு யாராவது என் பெயரால் செய்திருக்கலாம்" என்று சொல்லி, அதை விசாரிக்கும்படி அரசனிடமும் கூறினள். உடனே அரசன் ஒற்றர்களைக் கொண்டு ஆராய்ந்து உண்மையையறிந்து உடனே பிரத்விசந்திரனை விடுதலை செய்தான். விடுதலையடைந்த பிரத்விசந்திரன் அந்த அரசனையும் அரசியையும் தான் வணங்குவதுபோல் ஒரு படத்தையெழுதி அரசனிடம் காட்டி, அவனை வணங்கினன். அதைக்கண்ட அரசன் வெகு சந்தோஷமடைந்து பிரத்விசந்திரனுக்கு அநேக பரிசுகளைக்கொடுத்து, இங்கு நடந்த விசேஷங்களை மேகபிங்களனிடம்போய்ச் சொல்லிவிட்டுப் பின் அவன் நகரம் செல்லும்படி உத்தரவிட்டான். அவனும் அவ்வாறே செய்ய, மேகபிங்களன் பயந்து தானகவே வந்து, உக்ரசேனராஜனை வணங்கினன். அரசன் சந்தோஷமடைந்து அன்று முதல் தனக்குக் கிடைக்கும் பாகுடப் பொருள்களில் பாதியை அவனும், மற்றொரு பாதியை விரஷபஸேனையும்

அடையும்படிச் செய்வதாகக் கூறினன். அதன்படியே ஒரு நாள் தனக்குக்கிடைத்த இரு இரத்தினக் கம்பளங்களில் ஒன்றில் மேகபிங்களன் பெயரை எழுதி மேகபிங்களனிடமும், மற்றொன்றை விரஷபஸேனை பெயரை எழுதி விரஷபஸேனையிடமும் கொடுத்தான்.

பின்பு ஒருநாள் மேகபிங்களன் போர்வையை, அவன் மனைவி போர்த்திக்கொண்டு ரூபவதி வீட்டுக்குவந்துவிட்டுத் திரும்பிப் போகும்போது, அங்கிருந்த விரஷபஸேனையினுடைய போர்வையைக் கவனியாது மாற்றி எடுத்துப்போய்விட்டாள். அதனை மேகபிங்களன் கவனியாது அணிந்து மற்றொருநாள் அரசன்முன்வர, அரசன் அதிலிருந்த விரஷபஸேனைப் பெயரைக் கண்டு அவள்பேரில் சந்தேகங்கொண்டு, கோபமடைந்து அவளைக் கடலில் தள்ளிவிடும்படிக் கட்டளையிட்டான். அவளை அரசன் ஆட்கள் அவ்வாறே தள்ளினார்கள். அப்போது அவள், "இவ்வுபத்திரவம் நீங்கினால் நான் தவத்தை மேற்கொள்வேன்" என்று பிரதிக்ஞையைச் செய்தாள். அவ்வளவில், அங்கு ஜலதேவதை தோன்றி அவளை ஒரு சிம்மாசனத்தில் அமர்த்தி அஷ்டமகா பிராதிஹார்யங்களினால் பூஜித்தது. அதைக்கேட்ட அரசன், அங்குச்சென்று அவளை வணங்கித் தன்னை மன்னிக்கும்படி வேண்டினன்.

பின், அவளை அழைத்துவரும்போது அவள் வழியில் ஒரு தோட்டத்திலிருந்த குணதரர் என்னும் ஓர் அவதிக்ஞானியைக் கண்டு வணங்கித் தன் பூர்வஜன்ம விஷயங்களைக் கூறும்படிக் கேட்டாள். அப்போது அவர் யோஜித்து "நீ முன் பவத்தில் ஒரு பார்ப்பினிப் பெண்ணாய்ப் பிறந்து, ஒரு சத்திரத்தில் கூட்டும் தொழிலையுடையவளாயிருந்தாய். அப்போது அச்சத்திரத்தின் பிராகாரத்தில் பல்லிங்காசனமாய் உட்கார்ந்து தியானத்திலிருந்த முனிதத்தர் என்ற முனிபுங்கவரை, அவர் மகிமையறியாது, விலகி அப்பால் போகும்படிக் கூறினாய். அவர் தியானத்திலிருந்ததால் அதைக் கவனிக்கவில்லை. அதனால் கோபமுற்ற நீ, குப்பைகளைக் கூட்டி அவர் தலையில் கொட்டிவிட்டுப் போய்விட்டாய். மறுநாள் காலையில் அங்குவந்த அரசன் அதனைக்கண்டு பயந்து, குப்பைகளை விலக்கி, முனிபுங்கவரை

உச்சஸ்தானத்தில் வைத்துப் பூஜித்தான். அதைக்கண்டு நீ மிகவும்பயந்து அவரைப் பன்முறை நமஸ்கரித்துப் பின், பச்சாத் தாபமடைந்து அவருக்கு ஔஷதம் முதலியன கொடுத்து அவர் உபத்திரவங்களைப் போக்கினாய். அதன் பலனால் இச் சன்மத்தில் நீ ஸர்வௌஷதி ரித்தியையுடைய சரீரத்தையடைந் தாய். முன் ஜன்மத்தில், அறியாமல் நீ முனிவருக்குச் செய்த உபத்திரவத்தின் பலனாக, இச்சன்மத்தில் வீண்பழிக்காளாகி உபத்திரவப்பட்டாய்'' என்று கூறினார். அதனைக்கேட்டு விரஷப ஸேனை சம்சார சரீர விரக்தியடைந்து, ஜினதீக்ஷையையேற்றுத் தவத்தைச்செய்து, தேவனாகப் பிறந்தாள்.

சாஸ்திர தானத்தால் சிறப்படைந்த
21. கௌண்டேஸர்
(குந்த குந்தாசாரியார்) கதை.

குருமரை என்ற கிராமத்தில் ஒரு மரத்தின்மேல் இருந்த ஆகமத்தைக்கண்ட கோவிந்தன் என்ற இடையன், அதனை எடுத் துச் சிலகாலம் பூஜித்துப் பின் அங்குவந்த பத்மநந்தி என்ற முனிவரிடம் அதனைச் சேர்ப்பித்தான். அவர் அதை வனத் தில் எடுத்துப்போய், மற்றும் சில முனிவர்களுடன் வாசித்து விட்டு, அதை அம்மரத்தின் மேலேயே வைத்துவிட்டுச் சென் றார். அதைக் கோவிந்தன் மறுபடியுங் காண, அன்றுமுதல் அதை அங்கேயே மிக்க பக்தியுடன் பூஜித்துவந்தான். பின் கிரமத்தில் அவன் மரணமடைந்து கிராமகூடம் என்ற ஊரினில், வைசிய குலத்தில், கௌண்டேசன் என்ற ஒரு வைசியனாய்ப் பிறந்தான். அப்போது அங்கு வந்த பத்மநந்தி முனிவரைக் கண்டு ஜாதிஸ் மரணையடைந்து, தீக்ஷையை யேற்று, மகாதவத்தினைச் செய்து, சகல ஸ்ருதங்களிலும் (சாஸ்திரங்களிலும்) ஸம்பூர்ண ஞானத்தை அடைந்தவன் ஆனான். அவரே, அனேக ஜைன கிரந்தங்களுக்குக் கர்த்தாவான குந்த குந்தாசாரியார் என்ற ஸ்ருதகேவலி ஆவார்.

ஆவாஸதானத்தால் (இருக்க இடமளித்ததால்) சிறப்படைந்த

22. ஒரு பன்றியின் கதை.

மாளவ தேசத்தில் கடக் என்ற கிராமத்தில் நற்குணமுள்ள தேவிலன் என்ற குயவனும், துஷ்டனாகிய தர்மிலன் என்ற நாவிதனும் சேர்ந்து ஒரு தர்மசத்திரத்தைக் கட்டினார்கள். ஒருநாள் தேவிலன் ஒரு ஜைனமுனிவரை அழைத்துவந்து அதில் இருக்கச்செய்தான். துஷ்டனான நாவிதன் ஒரு பரிவ்ராஜக முனியை அழைத்துவந்து வைத்து, அங்கிருந்த ஜைன முனிவரைத் துரத்திவிட்டான். அவர் வெளியில் சென்று ஒரு மரத்தின் மேல் உட்கார்ந்து இரவு முழுதும் குளிரினாலும், கொசுக் கடியினாலும் மிக்க துன்பத்தையடைந்திருந்தார். மறுநாட் காலை அதைக் கண்ட தேவிலன் கோபமுற்று, அந்த நாவிதனோடு சண்டையிட்டு, இருவரும் மடிந்து, குயவன் ஒரு பன்றியாகவும் நாவிதன் ஒரு புலியாகவும் பிறந்தார்கள். அப்போது புலியின் குகையில் வந்து தங்கிய குப்தர், திரிகுப்தர் என்ற இரு முனிவர்களைக் கண்டு, பன்றி ஜாதிஸ்மரணையடைந்து அம்முனிவர்களை வணங்கி, வழிப்பட்டு இருந்தது. புலி தன் குகையில் மனிதர்களிருப்பதை மோப்பத்தினால் அறிந்து, அவர்களைப் பக்ஷிக்க, அவர்கள்மேல் பாய்ந்தது. அவ்வளவில், பன்றி அதனை எதிர்த்து அதனுடன் சண்டையிட்டு, இரண்டும் மரித்துப், பன்றி தேவலோகத்தில் போய் மகர்த்திகத் தேவனாய்ப் பிறந்தது. புலி மகா துக்கத்திற்கிடமான நரகத்தை அடைந்தது.



பக்தியினால் பூஜைக்குப் பூக்கொண்டு செல்லும் தவளை யானைக்காலினால் மிதிபட்டு தேவலோகம் அடைதல்.

23-வது கதை.

பக்தியினுல் சிறப்படைந்த

23. ஒரு தவளைக் கதை

மகத தேசத்து, இராஜக்கிரகம் என்னும் நகரில் ஸ்ரேணிக மகாராஜன் அரசு நடாத்தியிருந்தபோது அந்நகரில், நாகதத்தன் என்ற ஸ்ரேஷ்டி பவதத்தை என்ற தன் மனைவியுடன் வசித்திருந்தான். அவன் சதா மாயாசாரத்தில் வர்த்தித்து, ஆர்த்தத் தியானங்கொண்டு மரணமடைந்து, அதன் பலனுக அவன் வீட்டின் பக்கலிலுள்ள குளத்தில், ஒரு தவளையாகப் பிறந்தான். அவன் மனைவி குளத்துக்கு வரும்போதெல்லாம் அத்தவளை ஜாதிஸ்மரணையடைந்து, பூர்வஸ்நேகத்தால் அவள்மேல் தாவிக் குதித்து விளையாடியது. அதை எத்தனை தடவை தள்ளிவிட்டாலும், அவளை அது விடுவதில்லை. இதைக்கண்டு அவள், தனக்கும் அதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்கவேண்டும். அதனுல்தான் அது அப்படி விளையாடுகிறது என்று நினைத்து, அங்கு வந்த ஸுவ்ரதமுனிவர் என்ற அவதிக்ஞானியிடம் அதைப்பற்றிக் கேட்டனள். அவரும், பூர்வம் அது அவளுடைய பர்த்தாவாக விருந்ததைக் குறிப்பிட்டார். அதனையறிந்த பவதத்தை, அதை எடுத்துவந்து தன் வீட்டில் வைத்து மிகப் பிரேமையுடன் காப்பாற்றி வரலானுள்.

இஃதிவ்வாருக, ஒருநாள் அந்நகர்ப்புறத்து வைபார பர்வதத்தின்மிசை ஸ்ரீ வர்த்தமானஸ்வாமி எழுந்தருளியதை, வனபாலகனுலறிந்த அரசன், அதனை ஆனந்தமுரசமறைவித்துத் தன் நகர்ச்சனங்களுக்கு அறிவித்துத் தான் பூஜாத் திரவியங்களுடன் சமவசரணத்துக்குச் சென்ருன். பவதத்தையும் மற்ற ஜனங்களுடன் சுவாமி தரிசனத்துக்குச் சென்ருள். அப்போது அந்தத் தவளையும், பக்தியால் ஒரு தாமரையிதழை வாயில் கௌவிக்கொண்டு சமவஸரணத்துக்குப் புறப்பட்டது. ஆனுல், அது போகும் வழியில் ஒரு யானையின் காலால் மிதிபட்டு இறந்து, பூஜானுராகத்தினுல் ஏற்பட்ட புண்ணியத்தினுல், அப்பொழுதே சௌதர்ம கல்பத்தில்போய், மகர்த்திக தேவனுய்ப் பிறந்தது. அவ்வளவில், அவன் அவதிக்ஞானத்தால் தன் பூர்வ

பவத்தையறிந்து, ஒரு தவளை லாஞ்சனத்தையுடைய முடியை அணிந்து, உடனே ஸ்ரீ வர்த்தமானஸ்வாமி சமவஸரணமடைந்து, சுவாமியைப் பூஜித்தான். அதனைக்கண்ட ஸ்ரேணிகன் "இத் தேவன் தவளை லாஞ்சனத்தையுடைய முடியையணியக் காரணம் என்ன?" என்று ஸ்ரீ கௌதமஸ்வாமியை வணங்கிக் கேட்டான். அவரும் மேல்கண்ட அதன் விபரங்களைக்கூற, அரசனும் அங்குள்ள மற்றவர்களும் பூஜா பரிணாமத்தை அடையலானார்கள்.

சுபம். சுபம். சுபம்.

ஸ்ராவகாசார நீதிக் கதைகள் முற்றிற்று.

1244/2

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பவர் பிரிண்டிங் ஒர்க்ஸ், கும்பகோணம்.